தனி பிரதி ரூ. 5/–
ஆண்டு சந்தா ரூ. 60/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 8 இதழ் : 8 ஜூன் – 2012





**உன்மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 59 : 21**



ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்




சுதேச ஊழியர் சாட்சி

# சகோ. குல்லா டாமோர்

சஜேலி, மத்தியப்பிரதேசம்

எனது பெயர் **குல்லா M. டாமோர்** நான் மத்தியப்பிரதேசம் மாநிலத்திலுள்ள ஜாபுவா மாவட்டம், சஜேலி கிராமத்தைச் சேர்ந்தவன். நான் இயேசு கிறிஸ்துவை அறிவதற்கு முன்பாக பாவம் என்றால் என்ன என்பதைக் குறித்த அறிவு இல்லாமல் மிகவும் பாவமான வாழ்க்கை வாழ்ந்து வந்தேன்.

சாராயம் குடிப்பது, சண்டைபோடுவது, திருடுவது போன்றவை எனது வாடிக்கையான காரியங்களாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்த நான் மனதில் நிம்மதியும், சந்தோஷம் சமாதானம் அற்று வாழ்ந்து வந்தேன்.

ஒரு நாள் ஒரு சகோதரன் மூலமாக இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறிந்தேன். முதலாவதாக இயேசு கிறிஸ்துவை என் மனம் ஏற்க மறுத்தது. பின்பு நான் எனது கிராமத்தின் அருகிலுள்ள சபைக்குச் சென்றேன். அங்கு தேவனுடைய வார்த்தைகளைக் கேட்ட நான் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்தேன். அதன் பின்பு எனது பாவங்களையெல்லாம் தேவன் உணர்த்தி, அவற்றை விட்டுவிட கிருபை செய்தார்.

1998ம் ஆண்டு முழுமையாக இரட்சிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவை நேசிக்க ஆரம்பித்தேன். மேலும் தேவன் கொடுத்த கற்பனைகளைக் கைக்கொள்ள ஆரம்பித்தேன். தேவன் எனது குடும்பத்தில் மெய் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொடுத்தார்.

சபையில் விசுவாசியாக இருந்து, விசுவாசத்தில் வளர்ந்து வந்தேன். அதன்பின் என்னை இரட்சித்து சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தந்த தேவனுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையின் நிமித்தம், எனது பழைய வாழ்க்கையினைப் போல எனது கிராமத்தில் வாழ்ந்து வரும் ஜனங்களுக்கும் நான் பெற்ற இரட்சிப்பையும், சந்தோஷத்தையும் கொடுக்கும்படியாக ஊழியம் செய்ய அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து எனது கிராமத்தினை மையமாக வைத்து ஊழியம் செய்து வருகிறேன்.

எனக்காகவும், எனது ஊழியங்களுக்காகவும், எனது குடும்பம் மற்றும் பிள்ளைகளுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். தேவனுக்கே மகிமை!

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Bro. T. George, (Jesus Delivers Ministries), Kulasekaram, K.K. Dist.**

# உங்கள் சகோதரனிடமிருந்து....



*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் இந்த ஜுன் மாத மலர் மூலமாக சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த மே மாதம் நம்மில் அநேகர் நம் பிள்ளைகளுடன் சந்தோஷமாக இருந்தபடியால் தேவனைத் துதிக்கிறேன். அநேக தேவ பிள்ளைகள் குடும்பங்களில் வீடு பிரதிஷ்டை, திருமணம் போன்ற நல்ல காரியங்களையும் தேவன் காணச் செய்தார். தேவனுக்கே மகிமை செலுத்துவோம்.

கடந்த 5 மாதங்களில், பீல் மக்கள் அறுவடைப் பணியிலும் தேவன் பெரிய காரியங்களைச் செய்தபடியால், தேவனை துதிப்போம். Children Bible Class (VBS) பயிற்சியை சுமார் 900 பேர்களுக்கு நன்கு கொடுக்கவும், அதன்பின்பு மே 10 முதல் 20ம் தேதி வரை 10 நாட்கள் CBC மூலமாக, 3 மாநிலங்களில் 30,000க்கும் அதிகமான சிறுவர்கள் தேவனண்டையில் நடத்தப்படவும், அவர்கள் தேவனில் பெலப்படவும் தேவன் கிருபை தந்தார். அருட்பணிக்களுக்காக ஜெபித்து தியாகத்துடன் காணிக்கை அனுப்பிய சபைகள், குடும்பங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதிக்கிறோம். மனமார்ந்த நன்றியையும் கூறுகிறோம்.

அதுபோல் ஏப்ரல் 30 முதல் மே 9ம் தேதி வரை நம்முடைய குஜராத் தாகோத் அலுவலக ஊழியர்களுக்கும், Compassion Project, Hostel ஊழியர்களுக்கும் சிறப்பு ஆங்கில பயிற்சி 10 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. Madras Christian Collage School லிருந்து **சகோதரி. அனிதா, சகோதரி. கிறிஸ்டியானா** ஆகிய இருவரும் வந்து 10 நாட்கள் தங்கி, ஆங்கிலப் பயிற்சியை மிக அழகாக நடத்தி தந்தார்கள். அவர்களை அனுப்பிக் கொடுத்த M.C. C. School தலைமை ஆசிரியர் அன்பு **சகோ. மனோகரன்** அவர்களுக்காக தேவனை துதித்து நன்றி கூறுகிறோம். M.C. C. பள்ளி மூலமாக தேவன் கிராம ஆலயங்களைக் கட்டவும், சுதேச ஊழியர்கள் தாங்கப்படவும், ஆதிவாசி மாணவர்கள் தாங்கப்படவும் குறிப்பாக ஜெபித்து தாங்கப்படும்படியாக தேவ கிருபைக்காக அவரை துதிக்கிறோம். M.C. C. School நிறுவனத்திற்கு நன்றி கூறுகிறோம்.

கடந்த ஏப்ரல் மாதம் 22ம் தேதி அடியேன் கோவை பட்டணத்தில் கோவைபுதூர் IPA சபையில் தேவனுடைய வார்த்தையை 2 ஆலயங்களில் பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை தந்தார். என்னை அன்புடன் ஏற்று ஊழியங்களைத் தாங்க முன் வந்த அன்பு **போதகர். பீட்டர் பிராகாசம்** அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன். 10 நாட்கள் நடைபெற உள்ள CBC (சிறுவர் ஊழியத்தை) குறித்து பகிர்ந்து கொண்ட போது, ஒரு மாணவருக்கு தலா ரூ.7 வீதம் 5000 மாணவர்களுக்காக ரூ. 35,000 சபை மூலமாக காணிக்கை சேகரித்து அனுப்பி வைத்தார்கள். அது எங்களை அதிகமாக உற்சாகப்படுத்தியது. சபைகள் மிஷனெரிப் பணிகளைத் தாங்க முன் வரும் போது நிச்சயமாக தேவன் தேசத்தை சந்திப்பார்.

ஏப்ரல் மாதம் 20 முதல் 23ம் தேதி வரை **Pas. ஆமோஸ்** அவர்கள் குழுவாக வந்து இராஜஸ்தானில் **பட்டார்** கிராம ஆலயத்தையும், மத்திய பிரதேசத்தில் **கோய்கா** கிராம ஆலயத்தையும் பிரதிஷ்டை செய்யவும், ஊழியங்களை நிறைவேற்றவும் தேவன் உதவி செய்தார். நம் ஷாலோம் ஊழியங்களையும், பீல் மக்களையும் அதிகமாக நேசித்து ஜெபித்துத் தாங்கும் அன்பு **போதகர் ஆமோஸ்** அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம்.

ஜூன் மாதத்தில் நடைபெற உள்ள சுதேச ஊழியர்கள் கூடுகை, வாலிபர்கள் முகாம் மற்றும் ஆலயப் பிரதிஷ்டைகளுக்காக ஜெபியுங்கள். குறிப்பாக நாம் தாங்குகிற பீல் ஆதிவாசி மாணவர்கள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகளுடைய கல்விப் பணிக்காகவும் ஜெபியுங்கள். 10வது, 12வது மற்றும் பட்டப்படிப்பு, தொழில் கல்விக்காக இடங்கள் கிடைக்கவும், அவர்களுக்கு சரியான நிதி உதவி கிடைக்கவும் ஜெபியுங்கள். நாமும் நம்மால் முடிந்த அளவு உதவ வேண்டும். அதற்காக குறைந்தது **5 இலட்சங்கள்** தேவைப்படுகிறது. உங்களால் குறைந்த அளவு உதவி செய்ய அன்புடன் வேண்டுகிறேன்.

ஜூன் மாதம் முதல், என் **அன்பு மூத்த மகன் Gladson Titus**, குஜராத் பணித்தளத்தில் வந்து ஆதிவாசி மாணவர் கல்விப்பணியில் பொறுப்பு எடுத்து ஊழியம் செய்கிறார்கள். அவருக்காவும், அவரது எதிர்கால வாழ்க்கைக்காகவும் ஜெபியுங்கள். அதுபோல **இளைய மகன் Brighton Shalom** பணித்தளத்தில் Audio & Video Theatres ஆரம்பித்து ஊழியங்களை விரிவுபடுத்த ஒப்புக் கொடுத்துள்ளார்கள். தேவன் இவர்களை வல்லமையாக பயன்படுத்த ஜெபியுங்கள். ரஷ்யாவில் மருத்துவப் படிப்பு பயிலும் **அன்பு மகள் Joy shekinah** தனது 2ம் வருட படிப்பை முடித்து ஜூன் மாதம் 28ம் தேதி இங்கு வர இருக்கிறாள். அவளுக்காகவும் ஜெபியுங்கள்.

தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், Compassion Projects, Shalom Hostel, பள்ளிக்கூடங்கள் மற்றும் Training programmes ஆசீர்வதிக்கப்பட, பணிபுரியும் தேவ பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள். மேலும் முன்னேற்ற பணியாளர்களுக்காக குறிப்பாக சென்னை, மார்த்தாண்டம், நாகர்கோவில் பகுதியில் நல்ல Network பண்ணப்படவும், ஊழியத் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

இம்மாதம் உங்கள் யாவருக்காகவும் விசேஷமாக நாங்கள் ஜெபிக்கிறோம். புதிய கல்வியாண்டில் பள்ளியில் சேர்ந்துள்ள குட்டிப்பிள்ளைகள்; மேற்படிப்பில் இணைந்த வாலிபப்பிள்ளைகள்; வேலைவாய்ப்புகளைத் தேடி எதிர்காலத்திற்காக காத்திருக்கும் நம் பிள்ளைகள் யாவரையும் கட்டாயம் தேவன் ஆசீர்வதிப்பார்.

**"அப்பொழுது எங்கள் குமாரர் இளமையில் ஓங்கிவளருகிற விருட்சக்கன்றுகளைப் போலவும், எங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்ந்த அரமனை மூலக்கற்களைப்போலவும் இருப்பார்கள்".**

**(சங்கீதம் 144:12)**

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள
**09377445468**

# சந்ததியின் மேல் ஆசீர்வாதத்தை ஊற்றும் தேவன்

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

***"உன்மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்"... ஏசா. 59:21***

சிறைப்பட்டுப் போன இஸ்ரவேல் ஜனங்களை மீட்டு தன் ஜனமாகிய இஸ்ரவேலின் சந்ததியை தேவன் ஆசீர்வதிக்கிறார். நம் பிதாவாகிய தேவன், ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய கர்த்தர். அவர் சந்ததியின் சந்ததியை ஆசீர்வதித்து பலுகி பெருகப் பண்ணுகிறவர். புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் மூலமாக புற ஜாதியாராகிய நமக்கு விசுவாசத்தின் மூலமாக ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் கிடைக்கப் பெற்றோம். ***"ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று"*** *கலாத். 3:14*, ***"நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள் நான் உங்கள் தேவனாயிருப்பேன்"*** *(எரே. 30:22)* என்று தேவன் வாக்குப் பண்ணியிருக்கிறார். எதற்காக தேவன் நம் சந்ததியை ஆசீர்வதிக்க விரும்புகிறார் என்பதை தேவ வசன வெளிச்சத்தில் காண்போம்.

## தேவ பக்தியுள்ள சந்ததி

***"அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே. பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே."*** மல்கியா 2:15

பிதாவாகிய தேவன் ஆதாமைப் படைத்தபோது, பரிபூரணமாகப் படைத்தாலும் கூட அவர் இருதயத்தில் தாம் படைத்த உலகத்தில் தேவ பக்தியுள்ள சந்ததியை உருவாக்கச் சித்தம் கொண்டார். அதற்காகத்தான் ஏற்ற துணையான ஏவாளைப் படைத்து ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். இல்லற வாழ்வின் நோக்கமே தேவ பக்தியுள்ள சந்ததியை பெறுவதற்காகத்தான். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் பெரிய பிள்ளைகளாக ஆகிவிட்டார்கள். வேலை கிடைத்து விட்டது, நல்ல மகனை, மகளைப் பார்த்து பல காரியங்களை ஆராயந்து திருமணம் முடித்து வைப்பார்கள். பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள் நன்கு படித்து நல்ல வேலை செய்ய வேண்டும், தொழில் செய்ய வேண்டும் நல்ல செல்வந்தனாக மாற வேண்டும் என்று நினைப்பதெல்லாம் தவறல்ல. எல்லாவற்றையும் விட தேவ சித்தம் என்ன? தேவ பக்தியுள்ள சந்ததியை பெற்றெடுக்கத்தான் தேவன் இல்லற வாழ்வினைத் தந்துள்ளார்.

இந்த கடைசிக் காலங்களில் வேதம் சொல்கிறது மனிதர்கள் தேவ பக்தி அற்றவர்களாய் வாழ்கிறார்கள். தேவ பக்தியின் வேஷத்தைதத் தரித்து வாழ்கிறார்கள் என்று காண்கிறோம். ***"அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி, இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து, அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்கு கட்டளையிட்டார். இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின்சந்ததியார் அதை அறிந்துகொண்டு, அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும்படிக்கும்; தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையைக் வைத்து, தேவனுடைய செயல்களை மறவாமல், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும்" சங். 78 : 5,6,7*** எனும் வசனங்களின்படி முதலாவதாக நம் சந்ததியின் பிறப்பான பிள்ளைகளுக்கு வேதத்தைக் கற்றுக் கொடுத்து அறிவிக்க வேண்டும். அதன்படி நடக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். இரண்டாவதாக பிள்ளைகள் மூதாதையரின் ஐசுவரியத்தையே, பொன், வெள்ளி, சொத்துக்கள் மீதோ பேர் புகழ் மீதோ தங்கள் நம்பிக்கை வைத்திராதபடி தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் வளர வேண்டும். மூன்றாவதாக நம் சந்ததியாக நம் பிள்ளைகள் தேவனிடத்தில் முழுமையான அன்பை, முதல் அன்பாக செலுத்த வேண்டும். ***"நீ பிழைத்துப் பெருகும்படிக்கும், நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கும், நீ உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரவும், அவர் வழிகளில் நடக்கவும், அவர் கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ளவும், நான் இன்று உனக்குக் கற்பிக்கிறேன்.*** *உபா. 30:16*

**துதிகளைச் சொல்லி ஆராதிக்கும் ஜனம்**

***"இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் எஎன் துதியைச் சொல்லிவருவார்கள்."*** ஏசாயா 43 : 21

இந்த பூவுலகில் தேவனை ஆராதிக்கும்படி, துதிகளை ஏறெடுக்கும்படி தேவன் சந்ததியை ஆசீர்வதித்துள்ளார். துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிற கர்த்தர். வேதத்தில் தேவ ஜனங்கள் தேவனைத் துதிக்கும் போதெல்லாம் தேவ மகிமை இறங்கி வருவதை காண்கிறோம். சாலமோன் தேவாலயத்தில் ஜனங்கள் "கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது" என்று துதிக்கும் வேளையில் மேகமாக தேவ மகிமை இறங்கி வந்தது என்று பார்க்கிறோம்.

பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களைக் காணும்படியாகவும், ஊழியங்களைச் செய்யும்படியாகவும், கடந்த ஏப்ரல் மாதத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து சகோ. ஜார்ஜ், சகோ. ஜாண் நெல்சன், மற்றும் சகோ. சுந்தர்ராஜ் (பயணம்) ஆகியோர் வந்திருந்தார்கள். அது போல் மார்த்தாண்டம் A.G. சபை போதகர் ஆமோஸ் அவர்களும் குழுவாக வந்து ஊழியங்களை நிறைவேற்றினார்கள். மேலும் சென்னை M.C.C. பள்ளியிலிருந்து

10 நாட்கள் ஊழியர்களுக்கு ஆங்கில பயிற்சி கொடுக்கும்படியாக சகோதரி அனிதா மற்றும் சகோதரி கிறிஸ்டியான ஆகியோரும் பணித்தளத்திற்கு வந்திருந்தார்கள். அந்த நாட்களில் ஐந்து கிராம ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. பணித்தளத்திற்கு வந்த அனைவரும் ஒரு காரியத்தை தேவநாமம் மகிமைப்பட சாட்சியாகக் கூறினார்கள். குடித்து வெறித்து, திருடர்களாக அலைந்தவர்கள், பிசாசின் பிடியில் சிக்கி அந்தகாரத்திலும் இருந்தவர்களை இயேசு கிறிஸ்து இரட்சித்து மீட்டெடுத்த இந்த புது விசுவாசிகள் எப்படியாக துதித்து ஆராதிக்கிறார்கள் என்பதே!

இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட பின்பு அவருடைய நாமத்தை துதிப்பது, அவருக்கு ஆராதனை செய்வது, பீலி, பிலோ, வாகுடி மொழிகளில் பாடல்கள் பாடி பரிசுத்த ஆவியில் நிறைவது, அவர்கள் டோலாக், கஞ்சரி, மஞ்சரி போன்ற இசைக்கருவிகளை இசைத்து மணிக்கணக்கில் நடனமாடுவது மறக்க முடியாதது என்று அனைவரும் சாட்சி கூறுகிறார்கள்.

எனக்கன்பானவர்களே, தேவன் நம்மையும் நம் சந்ததியையும் எதற்காகத் தெரிந்து கொண்டார். நாம் அவருடைய துதிகளை சொல்லி ஆராதிக்கும்படியாகத்தான். குடும்பமாக தேவனைத் துதித்து ஆராதிப்போம். சபையாக துதிகளை ஏறெடுத்து ஆராதித்து தேவனை மகிமைப்படுத்துவோம். அது மட்டுமல்ல ஏசாயா 8 :18 இவ்வாறாக சொல்கிறது : ***"இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கின்ற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாககவும் இருக்கிறோம்".*** தேவன் நமக்குத் தந்த சந்ததியின் மீது தேவன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை ஏற்றி நம் பிள்ளைகளை தேவன் அடையாளங்களாக, அற்புதங்களாக வைக்கிறார். எவ்வளவு சந்தோஷம் பாருங்கள், நம் சந்ததியின் பிள்ளைகளை உலகத்திற்கு சாட்சிகளாக நிறுதி வைக்கிறார்.

**சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கும் சந்ததி**

பிதாவாகிய தேவன் ஆபிரகாமை அழைத்து தரிசனம் தந்து வழி நடத்திச் சென்றார். ஆதி. 12:2,3ல் பரிபூரணமான ஏழு ஆசீர்வாதங்களைக் கொடுத்தார். அதில் முக்கியமான ஏழாவது ஆசீர்வாதம் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்பது தான். அதே ஆசீர்வாதத்தை ஈசாக்கை பலி செலுத்த அர்ப்பணித்த போது ஆதி. 22:18ல் **"உன் சந்ததிக்குள் பூமியில் உள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்"** என்று வாக்குப்பண்ணினார்.

எனக்கன்பானவர்களே, தேவன் நம்மையும், நம் சந்ததியையும் ஆயிரங்களுக்கு, ஜாதிகளுக்கு ஆசீர்வாதமாக வைக்க விரும்புகிறார். சகாரியா, எலிசபெத் தம்பதியருக்கு தேவன் "யோவான்" பாலகனை தந்த போது : ***"உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும், அவன்***

*பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள். லூக். 1:14* என்று தேவன் வாக்களிக்கிறார். அதே போல தேவன் நம் சந்ததியையும் அநேகருக்கு சந்தோஷமாக மாற்ற விரும்புகிறார். 32 வருடங்களுக்கு முன்பாக தேவன் என்னை பேர் சொல்லி அழைத்து இரட்சித்து அபிஷேகித்தார். எனது 19வது வயதில் அபிஷேகத்தது மட்டுமின்றி பாரத தேசத்தில் ஒரு ஜாதி மக்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றுவேன் என்று திருவுளம் பற்றினார். 1985ஆம் ஆண்டு எங்கள் திருமணம் முடிந்த முதலாவது வாரத்தில் நாங்கள் ஜெபிக்கும்போது கைகளில் வில் அம்புகளை வைத்திருக்கும் ஜனங்களை பரம தரிசனமாக காட்டி கடந்த 26 வருடங்களாக முழு பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக வைத்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

எனக்கன்பானவர்களே, நீங்களும், உங்களுக்கு தேவன் தந்த சந்ததியும் பூமியிலுள்ள வம்சங்களுக்கு ஆயிரம் ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாக மாற வேண்டும். கர்த்தர் சொல்கிறார் உன் மேல் உள்ள அபிஷேகம், உன் வாயில் தேவன் தந்த வசனம் வாக்குத்தத்தங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் உனக்கும், உன் சந்ததிக்கும் உன் சந்ததியின் சந்ததிக்கும் தேவன் தரும் உன்னதமான ஆசீர்வாதமாகும். தேவ கிருபையால் நாமும், நம் சந்ததியும், நமது சபைக்கும், நம் தேசத்திற்கும் ஆசீர்வாதமாக விளங்குவோம். அல்லேலூயா!

## *ஷாலோம் கிராம ஆலய பிரதிஷ்டை 29.04.2012*
## *ரோகன்யா மன்னா, இராஜஸ்தான்*

தேவனுடைய பெரிதான கிருபையினால் இராஜஸ்தான் மாநிலத்தில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் குசல்கட் தாலுகாவில் ரோகன்யாமன்ன என்ற கிராமத்தில் சகோ. துல்லா கராசியா குடும்பமாக ஊழியம் செய்து வருகிறார். தேவ நாமம் மகிமைப்பட அங்கு 30 குடும்பங்கள் தேவனை ஏற்றுக் கொண்டுள்ளனர். சுதேச ஊழியர் தனது சொந்த நிலத்தை காணிக்கையாக அர்ப்பணிக்க, அந்த இடத்தில் கிராம ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு, தேவ கிருபையால் 29.04.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று நமது ஷாலோம் **பேராயர் தேவதாஸ்** அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதன்பின் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் சிறப்பு ஆராதனை நடத்தி ஜெபித்தார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது.

இந்த கிராம ஆலயம் சென்னை, சேத்துப்பட்டு, M.C.C. பள்ளியில் பணிபுரியும் **சகோ. பார்த்திபன்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டுள்ளது. இந்த கிராம ஆலய பிரதிஷ்டையில் M.C.C. பள்ளியிலிருந்து வந்த **சகோதரி அனிதா** மற்றும் **சகோதரி கிறிஸ்டியான** ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**ஷாலோம் ஊழியங்கள் நடைபெறும் பிராந்தியங்களுக்காக கருத்தாய் ஜெபியுங்கள்.**

| மாநிலம் | மாவட்டம் | ஊழியம் நடைபெறும் தாலுகாக்கள் |
|---|---|---|
| குஜராத் | தாகோத் | தாகோத், ஜாலோத் பதேபூரா, லிம்கேடா கர்பாடா, தான்பூர் |
| | பரோடா | சோட்டா உதய்பூர், கவாண்ட் |
| மத்தியப்பிரதேசம் | அலிராஜ்பூர் | பாபரா, ஜோபாட் அலிராஜ்பூர், உதய்கட் |
| | பட்வாணி | ராண்பூர், பட்வாணி, |
| | ரத்லம் | பாஜ்னா |
| | தார் | தார் |
| | ஜலிபூரா | ஜலிபூரா, மேக்நகர் தாந்தலா, ரான்பூர் பேட்லாவத், ராயி |
| | சத்தர்பூர் | பிஜாவர் |
| இராஜஸ்தான் | பான்ஸ்வாடா | குசல்கட், பாகிதோரா காடோல், கடி பான்ஸ்வாடா, |
| | உதய்பூர் | கேர்வாடா |
| | பிரதாப்கட் | பிரதாப்கட் |
| | டுங்கர்பூர் | டுங்கர்பூர் |

**நான் மோசேக்கு சொன்னபடி**
**உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும்**
**உங்களுக்குக் கொடுத்தேன்** – *யோசுவா 1 :3*

# ஷாலோம் சேரிட்டி மிஷன்

## பீல் ஆதிவாசி மாணவர் கல்வி மேம்பாட்டுத் திட்டம்

### ஜெபித்துத் தாங்கப்படும் மாணவர்களின் கண்ணோட்டம்.

| வ. எண். | விபரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | **இராஜஸ்தான் மாநிலம்** | | | |
| 1. | பிஜல்பூர் ஷாலோம் விடுதி | 130 | 84 | 214 |
| 2. | கோய்க்கா ஷாலோம் விடுதி | 32 | | 32 |
| 3. | பிற விடுதிகள் மற்றும் வீட்டிலிருந்து பயிலும் மாணவர்கள் | 179 | 75 | 254 |
| | **குஜராத் மாநிலம்** | | | |
| 4. | I.P. மிஷன் பள்ளி மற்றும் விடுதி | 19 | 15 | 34 |
| 5. | ஜெசவாடா ஷாலோம் விடுதி | 25 | | 25 |
| 6. | தாகோத் ஷாலோம் விடுதி | 7 | 7 | 14 |
| 7. | பிற விடுதிகள் மற்றும் வீட்டிலிருந்து பயிலும் மாணவர்கள் | 88 | 47 | 135 |
| | **மத்தியப்பிரதேசம்** | | | |
| 8. | கட்வாடா மிஷன் விடுதி | 46 | 8 | 54 |
| 9. | ஹரி நகர் ஷாலோம் விடுதி | 22 | 4 | 26 |
| 10. | பிற விடுதிகள் மற்றும் வீட்டிலிருந்து பயிலும் மாணவர்கள் | 89 | 65 | 154 |
| | மெத்த மாணவர்கள் | 637 | 305 | 942 |
| | ஆதரவாளர்களால் தாங்கப்படும் மாணவர்கள் | | | 648 |
| | ஆதரவாளர்கள் தேவைப்படும் மாணவர்கள் | | | 294 |

### *நமது பீல் ஆதிவாசி மாணவர்களில் உயர்கல்வி பயில்வோர் விபரம்*

| *கல்லூரி* | *12 th* | *11 th* | *10 th* | *மொத்தம்* |
|---|---|---|---|---|
| 31 | 31 | 49 | 66 | 177 |

# பீல் ஆதிவாசி சிறுவர்களை முன்னேற்றுவிக்கும் கல்விப் பணி

**பீல் ஆதிவாசி சிறுவர்கள்**

நமது பீல் ஆதிவாசி சிறுவர்களில் படிப்பறிவு உள்ள சிறுவர்கள் மிக மிக குறைவு. ஏனென்றால் அவர்களது பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் படிப்பினை குறித்த விழிப்புணர்வு மிகவும் குறைவு. ஆகையால் அவர்களை தங்களுடன் கூலி– வேலைக்கோ, அல்லது வேலை செய்யும்போது மற்ற சிறிய கைக் குழந்தைகளை கவனிப்பதற்கோ சிறுவர்களை தங்களுடன் அழைத்துச் சென்றுவிடுவர். சிறுவர்கள் பள்ளிக்குச் செல்வதைவிட கூலி வேலைக்குச் செல்வதே சிறந்தது என எண்ணுவர்.

**பீல் சிறுவர்களின் கல்வியில் ஷாலோம் ஊழியத்தின் பங்கு**

நமது ஷாலோம் ஊழியத்தின் மூலமாக பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காக 1 ஷாலோம் பள்ளி மற்றும் 10 மாணவ மாணவியர் விடுதிகள் உருவாக்கப்பட்டு, கல்விப் பணி நடைபெற்று வருகிறது. இதன் மூலம் ஏறக்குறைய 950 மாணவர்கள் இதன் மூலம் பயன்பெற்று வருகின்றனர். மேலும் சில பீல் ஆதிவாசி சிறுவர்கள் தற்போது ஆசிரியர், இன்ஜினியர், மருத்துவம் மற்றும் I.T.I. போன்ற துறைகளில் மேற்படிப்பு படித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**கல்விப் பணியில் எதிர்காலத் திட்டங்கள்**

“இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்” என்பது பழமொழி. இதைக் கருத்தில் கொண்டு நமது ஷாலோம் ஊழியம் செயல்பட்டு வருகிறது. வருங்கால தலைமுறை சிறுவர்களை சிறந்த தலைவர்களாகவும், உயர் பதவி வகிப்பவர்களாகவும் முன்னேற்றுவிப்பது நமது ஷாலோம் ஊழியத்தின் நோக்கமாகும். இதற்காக இனி வரும் நாட்களில் 10 ஆயிரம் சிறுவர்களுக்கு கல்வியறிவு கொடுத்து சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதே நமது திட்டமும், தரிசனமுமாகும்.

**பீல் ஆதிவாசி பிள்ளைகளின் கல்வித் தேவைகள்**

பீல் ஆதிவாசி சிறுவர்கள் வருகின்ற 2012 ஜுன் மாதத்தில் புதிய கல்வி ஆண்டில் சேர்க்கப்படவும், அவர்களுக்கு தேவையான நோட்டு புத்தகங்கள், சீருடைகள், பேனா, பென்சில், புத்தகப் பை போன்ற இதர பொருட்கள் வாங்கிக் கொடுப்பதற்கும் ஒரு குழந்தைக்கு குறைந்தது ரூ. 500/– தேவைப்படுகிறது. மேலும் நாம் தாங்கி வரும் 900 மாணவர்களில் உணவு மற்றும் இதர செலவினங்களுக்காக மாதந்தோறும் ரூ. 500/– கொடுத்துத் தாங்கிவரும் குழந்தை ஆதரவாளர்கள் தற்போது 648 பேர் மட்டுமே உள்ளனர். மீதம் உள்ள 252 சிறுவர்களுக்கு ஆதரவாளர்கள் கிடைக்கவும், புதிய கல்வியாண்டின் தேவைகள் 4.5 லட்சங்கள் சந்திக்கப்படவும், வருங்காலத் திட்டங்களையும், தரிசனங்களையும் நிறைவேற்ற தேவன் கிருபை தரவும் ஜெபியுங்கள். ஆவியானவர் உங்கள் உள்ளங்களில் ஏவுவாராகில், பீல் பிள்ளைகளின் கல்விப் பணிக்கு உதவ தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

# CBC (CHildren Bible Class)
# இயக்குநர் மற்றும் ஆசிரியர் பயிற்சி

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த ஏப்ரல் மாதம் குஜராத், மத்தியப்பிரதேசம், மற்றும் இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களிலும் உள்ள ஷாலோம் சபைகளில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கான CBC (Children Bible Class) நடத்துவதற்காக, CBC இயக்குநர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயிற்சி நடைபெற்றது. ஏப்ரல் மாதம் 20 மற்றும் 21ம் தேதிகளில் குஜராத் சபைகளுக்கும், 23 மற்றும் 24ம் தேதிகளில் மத்தியப்பிரதேசம் சபைகளுக்கும், 25 மற்றும் 26ம் தேதிகளில் இராஜஸ்தான் சபைகளுக்கும், தாகோத்திலுள்ள CNI ஹாலில் வைத்து பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த பயிற்சி முகாம்களில் CBC இயக்குநர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 900 பேர் அதாவது குஜராத்தில் 202 பேரும் மத்தியப்பிரதேசத்தில் 332 பேரும், இராஜஸ்தானில் 366 பேரும் பங்கு பெற்றனர்.

இந்த ஆண்டு CBC **"எனது அழகான இருதயம்"** என்ற தலைப்பின் கீழ் சங்கீதம் **45 : 1–**ஐ அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது. இதற்கென்று **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் மற்றும் பயிற்சிக் குழுவும் இணைந்து பாடப்புத்தகங்கள், ஆசிரியர் கையேடுகள், பத்து நாட்களுக்கென்று இருதயத்தைக் குறித்த பாடங்கள், மனப்பாட வசனங்கள், அதற்கு ஏற்றவாறு அபிநயப் பாடல்களை ஹிந்தியில் எழுதவும், இராகம் மற்றும் இசை அமைத்து CD- ஆக வெளியிடவும், பாடல் புத்தங்கள் தயாரிக்கவும், கருப்பொருள் படங்கள், மனப்பாட வசன அட்டைகள் ஆகியவற்றைத் தயாரிக்கவும் தேவன் அருளின மாபெரும் கிருபைகளுக்காய் அவருக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துகிறோம்.

இந்த மூன்று முகாம்களும் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. துதி ஆராதனையை **சகோதரி வஹிதா தேவதாஸ்** மற்றும் **சகோ.ஃப்ராங்க்ளின் பென்னட்** ஆகியோர் இணைந்து நடத்தினார்கள். அதன் பின் **சகோதரி வஹிதா தேவதாஸ்** தேவ செய்தியளித்தார்கள். தேவ வார்த்தையைக் கேட்ட அனைவரும் பீல் ஆதிவாசி சிறுவர்களை தேவனுக்காய் ஆயத்தப்படுத்துவோம் என்று தங்களை அர்ப்பணித்தார்கள். அதன்பின் Action பாடல்கள் அனைவருக்கும் கற்றுக் கொடுக்கப்பட்டது. அனைவரும் குதூகலத்தோடும், உற்சாகத்தோடும் பாடல்களைப் பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். மதிய உணவிற்குப் பின் மீண்டும் பாடல்கள் கற்றுக் கொடுக்கப்பட்டது.

அதன்பின் பாடங்களை எப்படிக் கற்பிப்பது என்று செய்முறையாக விளக்கப்பட்டது. பொருட்கள் மற்றும் பொம்மைகளை வைத்து எப்படி பிள்ளைகளுக்கு பாடங்கள் கற்றுக் கொடுப்பது என்று **சகோ. பாவ்சிங் கட்டாரா** அவர்கள் கற்றுத் தந்தார்கள். அதன்பின் வரைபடங்கள் மூலம் எப்படி கற்றுக் கொடுப்பது என்று **சகோ. விகாஸ் கராசியா** அவர்கள் கற்றுத் தந்தார்கள். அதோடு நாடகத்தின் மூலம் எப்படி பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்பது என்பதை விளக்கும் வகையில் குறு நாடகங்களும் நடத்தப்பட்டன. அதன்பின் தங்கள் குரல்களின் எப்படி பாடம் கற்றுக் கொடுப்பது என்பதைக் குறித்து **சகோ. அனி சௌகான்** அவர்கள் கற்றுத் தந்தார்கள். அதன்பின் மறுபடியும் பத்து நாட்களுக்குறிய பாடங்கள் சுருக்கமான முறையில் விளக்கிக்

கூறப்பட்டது. அதன் பிறகு **"எனது அழகான இருதயம்"** என்ற தலைப்பின் கீழ் ஒரு குறு நாடகம் நடத்தப்பட்டது. அதாடு கூட Puppet Show மூலம் எப்படி பிள்ளைகளுக்கு கதைகள் சொல்வது என்று விளக்கும்படியாக ஷாலோம் பயிற்சிக் குழு மூலமாக Puppet Show Programme ஒன்று நடத்தப்பட்டது.

அதன்பின் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் சிறுவர்களை அணுகும் முறை, கற்றுக் கொடுக்கும் முறை ஆகியவற்றைப் பற்றி ஒரு சில ஆலோசனைகளை வழங்கினார்கள். அதில் 70 வயதில் ஒருவர் இரட்சிக்கப்பட்டால் அவர் மரிக்கும் வரை மரிக்கும் மற்றவர்களைத் தேவனிடத்தில் ஆதாயப்படுத்தும் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 7 வயதில் ஒரு சிறுவன் இரட்சிக்கப்பட்டால் அவன் தான் மரிக்கும் போது அநேகரைத் தேவனுக்கென்று ஆதாயப்படுத்த முடியும் என்பதைக் குறித்து சகோதரி விளக்கி ஜெபித்தபோது அனைவரும் பரிசுத்த ஆவியானவரால் தொடப்பட்டு, பீல் ஆதிவாசி சிறுவர்களை எப்படியாவது சிறு வயதிலேயே தேவனுக்கென்று ஆதாயப்படுத்த வேண்டும் என்று தேவ சமூகத்தில் தங்களை அர்ப்பணித்தார்கள். அதே அர்ப்பணிப்போடும், ஆத்தும பாரத்தோடும் அனைவரும் கடந்து சென்றனர்.

இந்த ஆண்டு 30 ஆயிரம் சிறுவர்களைக் கருத்தில் கொண்டு 30 ஆயிரம் பாடப்புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டுள்ளது. இந்த CBC மூலமாக அனைத்துப் பிள்ளைகளும் இரட்சிக்கப்படுவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. இதற்காக ஜெபித்த, கொடுத்த உங்கள் யாவருக்காகவும் நன்றி செலுத்துகிறோம்! தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக!

## `ôúXôm a`ù]¬ ù_TdáÓûL

| நாள் | நேரம் |
|---|---|
| **9.06.2012, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*தேவ செய்தி :* **Pr. V. ஜெபா ஐசக் வெஸ்லி,** பாகோடு

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு

**சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,

**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

# ஷாலோம் 24 மணி நேர சங்கிலி தொடர் ஜெபம்

**கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,**

வளர்ந்து வரும் ஷாலோம் மிஷனெரிப் பணிகளுக்காக, ஊழியர்களுக்காக, சபை வளர்ச்சிக்காக, முன்னேற்ற பணி திட்டங்களுக்காக தேவையான நிதி உதவிகளுக்காக, குறிப்பாக, **1** கோடிக்கும் அதிகமாக உள்ள அனைத்து பீல் மக்கள் இரட்சிப்பிற்காகவும் இந்த பரம தரிசன பணியை ஏற்று நடத்துகின்ற அன்பு **சகோ. பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்பத்திற்காக ஜெபிக்க கடமைப்பட்டுள்ளோம்.

தேவ கிருபையால், பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலின்படி, ஒவ்வொரு மாதமும் **3**வது சனிக்கிழமை அதிகாலை **12** மணி முதல் இரவு **12** மணி வரை **24** மணி நேரம் தொடர் சங்கிலி ஜெபம் ஒழுங்கு செய்யப்பட்டு மிக நேர்த்தியாக நடைபெற்று வருகிறது. இந்த சங்கிலி தொடர் ஜெபத்தில் இணைந்து **1** மணி நேரம் ஜெபிக்கும் படியாக, **57 பேர்கள்** தங்கள் பெயர்களை கொடுத்துள்ளார்கள். அவர்களுக்கு தவறாமல் ஜெபக் குறிப்புகளை அனுப்பி வைத்திருக்கிறோம். ஜெப வீரர்கள் தங்கள் இடத்திலிருந்தே ஜெபித்து வருகிறார்கள்.

இம்மாதம் **16.06.2012 சனிக்கிழமை அதிகாலை 12.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை 24 மணிநேர சங்கிலி தொடர் ஜெபம் நடைபெற உள்ளது.** நீங்கள் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது **1** மணிநேரம் ஜெபிக்க எங்களுடன் தொடர்பு கொண்டு ஜெபக்குறிப்புகளை பெற்றுக் கொண்டு ஜெபிக்க அன்புடன் அழைக்கிறோம்.

**"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்." (கலாத்தியர் 6:2)**

---

## பணித்தளத்தின் அவசர தேவைக்காக ஜெபியுங்கள்

---

| | | |
|---|---|---|
| **1.** | **வீடியோ கேமரா (Normal) - 1** | **மதிப்பு ரூ. 30,000** |
| **2.** | **வீடியோ கேமரா (Professional) - 1** | **மதிப்பு ரூ. 1,75,000** |
| **3.** | **கேமரா 3 (3 மாநிலங்களுக்கும்)** | **மதிப்பு ரூ. 20,000 வீதம் (மொத்தம் ரூ. 60,000)** |
| **4.** | **வீடியோ எடிட்டிங் செய்ய கம்யூட்டர் – 1** | **மதிப்பு ரூ. 1,25,000** |
| **5.** | **ஜெனரேட்டர் – 1** | **மதிப்பு ரூ. 1,00,000** |

# ஷாலோம் ஊழியர்களுக்கான 10 நாள் ஆங்கிலப் பயிற்சி

கர்த்தருடைய பெரிதான கிருபையால் அன்பு பகிர்வு இயக்கத்தின் மூலமாக தேவப் பணியினை செய்துவரும் ஊழியர்களுக்கு, **திருமதி. அனிதா, திருமதி. கிறிஸ்டியனா** ஆகிய நாங்கள் இருவரும் அடிப்படை ஆங்கிலம் கற்றுக் கொடுக்கும்படியாக அழைக்கப்பட்டிருந்தோம். இந்த அழைப்பு எங்கள் பள்ளி தாளாளர் **திரு. ஜி.ஜே. மனோகர்** மூலம் கடவுள் விடுத்த அழைப்பு என்று கருதி, இவ்வழைப்பினை ஒரு பெரிய கிருபையாக எண்ணி கடவுளுக்கு நன்றி கூறி வாஞ்சையுடன் செயல்பட ஆரம்பித்தோம்.

நாங்கள் சென்னை கிறிஸ்தவ கல்லூரி மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறோம். எங்கள் பள்ளி 177 ஆண்டுகளுக்கு முன் ஸ்காட்லாந்து மிஷனெரிகள் மூலமாகத் தொடங்கப்பட்டது. இது மிகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், நலிந்தவர்களுக்கும் கல்வி கற்றுக் கொடுக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. 177 ஆண்டுகளுக்குப் பின் இன்னமும் இந்த வாஞ்சை மேலோங்கியிருப்பதின் காரணமாகத்தான் இந்தச் சேவையைச் செய்ய எங்கள் பள்ளி தலைமை ஆசிரியர் ஒப்புக் கொண்டார்.

இந்த ஆங்கில வகுப்புகள் குஜராத், இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பணியாற்றும் ஷாலோம் ஊழியர்களுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 2012 ஏப்ரல் 30 ம் தேதி தொடங்கி மே 9ம் தேதி வரைக்கும் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரைக்கும் நடைபெற்றது. காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரை காலை ஆராதனையும் நடைபெற்றது. மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை அன்றைய பாடங்களின் திருப்புதல் நடைபெற்றது.

ஆங்கிலத்தின் அடிப்படை இலக்கணமாகிய **Parts of Speech, Prepositions, Pronouns, Articles, Auxiliary Verbs, Degrees of Comparison, Punctuation, Direct Indirect Speech, Question Formation, Simple Compositions** போன்றவை கற்றுக் கொடுக்கப்பட்டன. அங்கிலத்தில் கற்றுக் கொடுக்கப்பட்ட பாடங்களை திருமதி கேரட் அவர்களால் சிறப்பாக மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது. ஆங்கிலம் கற்க வந்திருந்தவர்களின் ஆங்கிலத் திறன் சிறிது குறைவாக இருந்தபடியால் எங்களது பாடத்திட்டங்களை சிறிது எளிமையாக்க வேண்டியிருந்தது. மாணவர்களுக்கு மிகவும் தெளிவாக பாடங்கள் விளக்கப்பட்டன. சிறு வினாக்கள் கேட்க அவர்கள் விடைகளை ஆங்கிலத்தில் முழு வாக்கியமாகச் சொல்லும்படியாக ஊக்குவித்தோம். வகுப்புகளில் மாணவர்கள் தங்கள் சந்தேகங்களையும், மற்ற வினாக்களையும் ஆங்கிலத்திலேயே கேட்க பழக்குவிக்கப்பட்டனர். நாங்கள் எடுத்த Power Point Presentation மாணவர்களுக்கு மிகவும் பெரிதும் உதவியாக இருந்தது. மாணவர்கள் திட்டமும் தெளிவுமாகக் கற்றுக் கொண்டார்கள். பயிற்சிக் கால முடிவுக்குப்பின் தேர்வு நடத்தப்பட்டது, அதில் மூன்று பேர் 89% மதிப்பெண்களும், அநேகர் 75% மதிப்பெண்களும், அதிகமானோர் 50%க்கு மேலாக மதிப்பெண்களும் எடுத்தது எங்களை வியப்பில் ஆழ்த்தியது. அனைவருமே மிகவும் வாஞ்சையோடும், உற்சாகத்தோடும் இந்தப் 10 நாட்கள் பயிற்சியில் கலந்துகொண்டார்கள். கடைசி நாள் இரவில் Camp Fire Programme நடைபெற்றது. மாணவர்கள் தங்கள் கலாச்சார

உடைகளை அணிந்து, நடனமாடி தேவனைத் துதித்தனர். அவர்களோடு நாங்களும் இணைந்து நடனமாடினோம். மேலும் இறுதி நாள் நிகழ்ச்சிகள் பிஷப் தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் ஆகியோர் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. பயிற்சி பெற்ற மாணவர்களில் ஐந்து பேர் முன்னால் வந்து முதல் தடவையாக ஆங்கிலத்தில் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் கூறினார்கள். நாங்கள் மிகவும் ஆச்சரியமடைந்தோம். நிச்சயமாகவே இயேசு இவர்களை நேசிக்கிறார். இவர்கள் மீது பெரிய நோக்கத்தை வைத்துள்ளார் என்பது தெரிகிறது.

குறிப்பாக இந்த நாட்களில் அடிக்கும் கடுமையான வெயிலின் மத்தியிலும் நாங்கள் மிகவும் சுகமாய், எந்தவித பிரச்சனையும் இல்லாமல் பயிற்சிகளை நடத்த தேவன் கிருபை செய்தார். இவர்களுடன் இணைந்து ஒரே குடும்பம் போன்று காணப்பட்டோம். கர்த்தருக்குச் சித்தமானால் மறுபடியும் சென்று தொடர்பணி செய்ய வேண்டும் என்கிற வாஞ்சை அவர்களுக்கும் எங்களுக்கும் உள்ளது.


இவர்களுடைய ஜெபம் மற்றும் ஆராதனை, இயேசுவோடு இவர்கள் வைத்திருக்கும் உறவு இவற்றைப் பார்க்கும்போது, எங்களது ஆத்துமா களிகூறுகிறது. எங்களை இந்த ஊழியத்தினைச் செய்யும்படி அனுப்பிய எங்களது தலைமை ஆசிரியர் அவர்களுக்கும், மற்றும் **பிஷப் V. தேவதாஸ்** அவர்கள் குடும்பத்திற்கும், எங்களது அன்பின் நன்றியினைக் கூறுகிறோம். மேலும் இந்த ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கவும், எங்களது நண்பர்கள் உறவினர்களுக்கு அறிமுகம் செய்யுமாறு தீர்மானித்துள்ளோம். தேவன் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக!

---

## *அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு...*

---

# நினைவுப்படுத்துகிறோம்......



அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!

இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம்.

நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O., D.D., or Cheque** மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். அதைத் திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468** – இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

# ஷாலோம் ஊழியர்களுக்கான 10 நாட்கள் ஆங்கில பயிற்சி - 2012






பயிற்சியளித்த சகோதரி அனிதா மற்றும் சகோதரி கிறிஸ்டியனா







பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ்கள் வழங்கும் பிஷப் தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ்





பீல் ஆதிவாசி மக்களின் கலாச்சார உடையில் பயிற்சியாளர்கள்



பயிற்சி பெற்ற நமது ஷாலோம் ஊழியர்கள்

## ஷாலோம் கிராம ஆலய பிரதிஷ்டை - 29.04.2012 (ரோகன்யா மன்னா, இராஜ)



பிரதிஷ்டை செய்யும் பிஷப் தேவதாஸ் அவர்கள்



ஆராதனை வேளை





விசுவாசிகள் மற்றும் மூப்பர்களுடன் பிஷப் தேவதாஸ் அவர்கள் குடும்பம்

## ஷாலோம் சுதேச ஊழியர் பிரதிஷ்டை ஆராதனைகள்







**Bro. ஜார்ஜ் (Jesus Delivers Ministries), Kulasekaram - 05.05.2012**






**Pr. T. ராஜகோபால் (Shekinah Prayer Fellowship), K.K. Dist. - 06.05.2012**

# ஷாலோம் CBC இயக்குநர் மற்றும் ஆசிரியர் பயிற்சி - 2012



பாடல் மற்றும் ஆராதனை வேளை



பயிற்சியளிக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்





Puppet Show மற்றும் குறு நாடகங்கள் மூலமாகப் பயிற்சி



தலைப்புகளுக்கான வரைபடங்கள்



ஆடல் பாடல் வேளை





உற்சாகத்துடன் கலந்துகொண்ட பயிற்சியாளர்கள்

# Pr. ஆமோஸ் அவர்களின் குழுவினரின் பணித்தள வருகை, ஏப்ரல் 20to23



காளகேத் கிராம சபையில் கலாச்சார வரவேற்பு



காளகேத் கிராம சபையில் கூடியிருந்த ஜனங்கள்



செய்திவேளை – பாட்டன்புரா கிராம ஆலயம்



விசுவாசிகளுக்கான ஜெபம் – Pr. ஆமோஸ்





தேவ நாமம் மகிமைப்படும்படியாக மத்தியப்பிரதேசம், தேவ்கா கிராம ஆலய பிரதிஷ்டை



பட்டார், (இராஜஸ்தான்) கிராம ஆலயப் பிரதிஷ்டை



பட்டார் கிராம ஆலயத்தில் கலாச்சார வரவேற்பு

## பணித்தள வருகை - ஏப்ரல் 20ம் தேதி முதல் - 23ம் தேதி வரை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் இந்த வருடமும் வட இந்தியாவில் நடைபெற்று வரும் ஷாலோம் ஊழிய பணித்தளங்களைப் பார்வையிட்டு, ஊழியங்களில் ஈடுபட கர்த்தர் செய்த காரியங்களைக் குறிப்பிட்டு எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

கர்த்தருடைய கிருபையால் கடந்த மாதம் (ஏப்ரல்) 18–ம் தேதி **பாஸ்டர் ஆமோஸ்** மகன் **சகோ. ஜெரோம், ஸ்டீபன், சகோ. எமனால்டு** (பூவங்கோடு), **சகோ. சுஜன்** (மார்த்தாண்டம்) ஆகிய நான்கு பேர்களாக குஜராத், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நடைபெறும் ஊழியங்களை நேரடியாகச் சென்று பார்வையிடவும், ஊழியங்களில் பங்குபெறவும் கர்த்தர் கிருபை செய்தார். இதன் மூலம் பலவிதமான அனுபவங்களைப் பெற்றோம். இவற்றைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**18.04.2012**–புதன்கிழமை அதிகாலை நாகர்கோவிலிருந்து புறப்பட்டு மும்பை வழியாக தாகோத்திற்கு (குஜராத்) 20ம் தேதி வெள்ளிக்கிழமை அதிகாலை 10.30 மணிக்கு வந்து சேர்ந்தோம். உடனே 11.00 மணியளவில் CBC (VBS) சிறுவர்களுக்கான கோடைகால விடுமுறை வேதாகம வகுப்புகளுக்கான ஆசிரியர் பயிற்சியின் துவக்க ஜெபத்தினை செய்து ஆரம்பித்து வைக்க தேவன் கிருபை செய்தார்.

இதில் மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் பயிற்சிக்கு வந்திருந்தார்கள். அதில் அநேக சபை போதகர்களும் பங்கு பெற்றார்கள். அதன்பின் 11.30 மணிக்கு புறப்பட்டு மத்தியப்பிரதேசத்திலுள்ள காலகேத் என்னும் பணித்தளத்திற்கு 1.30 மணிக்குச் சென்றடைந்தோம். அங்குள்ள கிராம சபையில் சுமார் 250 பீல் ஜனங்கள் கூடியிருந்தனர். அவர்கள் மத்தியில் **சகோ. எமரால்டு** மற்றும் **சகோ. சுஜன்** ஆகியோர் தங்கள் அனுபவ சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டனர்.

தொடர்ந்து **Pr. ஆமோஸ்** அவர்கள் கர்த்தருடைய வார்த்தையினை அளித்து ஜெபித்தபோது, கூட்டத்தில் பலர் வியாதியிலிருந்து விடுதலை பெற்றார்கள். சிலர் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். அநேகர் அபிஷேகம் பெற்றனர். அந்த ஜனங்களின் பாடல் மற்றும் ஆராதனை வேளைகள் எங்களை பரவசமடையச் செய்தது. இங்குள்ள பழைய ஆலயத்திற்குப் பதிலாக புதிய ஆலயத்தைக் கட்டிவருகிறார்கள். அதன் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**21.04.2012** (சனிக்கிழமை) அன்று காலை 8.00 மணிக்கு CNI ஆலய வளாகத்திலுள்ள அரங்கத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த CBC பயிற்சி முகாமில் தியான செய்திக் கொடுத்துவிட்டு, காலை 10 மணியளவில் பணித்தளத்திற்குப் புறப்பட்டோம். அன்று மத்தியப்பிரதேசத்திலுள்ள தேவ்கா என்ற கிராமத்தில் **சகோ. எமரால்டு** அவர்களின் உதவியினால் கட்டப்பட்ட ஆலயத்தின் பிரதிஷ்டை ஆராதனையையும் பொதுக்கூட்டத்தையும் ஒழுங்கு செய்திருந்தார்கள். ஆலயம் நிரம்பி வழியும் நிலையில் நூற்றுக்கணக்கான மக்கள் எழுச்சியுடன் காணப்பட்டார்கள். கர்த்தருடைய மகிமை நிரப்பிற்று. அசாதாரணமான கர்த்தருடைய கிரியைகள் அங்கு வெளிப்பட்டது. சாலமோன் ராஜா ஆலயத்தைக் கட்டி

பிரதிஷ்டை பண்ணின நாளிலே தேவ மகிமை இறங்கினதை நினைப்பூட்டுவதாக அது இருந்தது. ஆடுகளை வெட்டி நல்ல விருந்தும் ஆயத்தப்படுத்தியிருந்தார்கள். அற்புதமான விடுதலை அநேகர் பெற்றுக்கொண்டார்கள். பலர் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றனர். ஆராதனை முடிந்த பின்பும் ஜனங்கள் திரும்பிச் செல்ல மனதில்லாதவர்களாகக் காணப்பட்டார்கள். நேரத்தினைப் பார்த்துப் பார்த்து ஆராதிக்கும் நமது ஜங்கள் அனைவரும் அங்கு சென்று அவர்களைப் பார்த்தால் நிச்சயமாக மாற்றத்தினைக் கண்டுகொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

22.04.2012 (ஞாயிறு) அன்று காலை 7.30 மணிக்கு புறப்பட்டு, ராஜஸ்தானில் சுமார் 4.30 மணிநேர பிரயாண தூரத்திலுள்ள பட்டார் என்ற கிராத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆலயத்தின் பிரதிஷ்டையிலும், ஞாயிறு ஆராதனையிலும் பங்குபெற தேவன் கிருபை செய்தார். இந்த கிராம ஆலயம் மார்த்தாண்டம் A.G. சபை அங்கத்தினர் **சகோ. C.T. ராஜன்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியால் கட்டப்பட்டதாகும்.

மெய்யாகவே, நாங்கள் மிகைப்படுத்தவில்லை. தாகோத்திலிருந்து 150 கி.மீ. பயணம் செய்து பான்ஸ்வாடா என்ற இடத்தை அடைந்தோம். அதிலிருந்து 50 கி.மீ. தூரத்திலுள்ள ஓர் மலையின் அடிவாரத்தினை அடைந்தோம். அதனைத் தொடர்ந்து மண் ரோடு வழியாக சுற்றிச் சுற்றி மலை உச்சியினை அடைந்தோம். வழியில் எங்கும் வீடுகள் ஒன்று கூட தென்படவில்லை. உண்மையைச் சொன்னால் உள்ளத்தில் இப்படியொரு நிகழ்ச்சி வேண்டுமா என்ற முறு முறுப்பு ஏற்பட்டது. எப்படியோ செல்ல வேண்டிய இடத்தை அடைந்தோம்.

ஆனால் அந்த ஊழியம் எப்படிக் கட்டப்பட்டது என்றதை அறிந்த போது என்னுடைய உள்ளத்தில் குற்ற உணர்வு ஏற்பட்டது. நிச்சயமாக நம்மால் இப்படியொரு ஊழியத்தினை ஏற்படுத்த முடியாது. சுமார் 30 கீ.மீ தூரம் மலையை நடந்தே ஒவ்வொரு முறையும் ஏறி (பல இடங்களில் உட்கார்ந்து, உட்கார்ந்து) ஒரு குடும்பத்திற்காக மொத்தம் சுமார் 80 கி.மீ. பயணித்து கட்டப்பட்ட ஊழியம். தற்போது இங்கு சபை மட்டுமல்ல, அந்த ஊழியர் உட்கார்ந்து, உட்கார்ந்து சென்ற ஒவ்வொரு இடத்திலும் ஊழியங்கள் ஏற்பட்டுள்ளது.

அனைத்து வசதிகளும் கொண்ட இந்த 21ம் நூற்றாண்டிலும் இப்டியும் ஊழியம் செய்கின்றார்களே என்று எண்ணி எண்ணி ஆண்டவரைத் துதித்தோம். பணித்தளங்களுக்கு எங்களுடன் **பிஷப் தேவதாஸ்** மற்றும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோர் கூட வந்திருந்தனர். CBC பயிற்சியின் மூலம் களைப்பு அடைந்திருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் எங்களுடன் வந்து ஜெபங்களை வல்லமையாக நடத்தினார்கள். பணித்தளங்களில் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யவும், செய்தியளிக்கவும் தேவன் எங்களுக்கு கிருபை செய்தார். மேலும் அங்கு பல அற்புதங்களும் நடந்தன. குறிப்பாக நடக்கவும் வாய் பேசவும் முடியாத 12 வயது சிறுமி எழுந்து நடக்கவும் பேசவும் தேவன் கிருபை பாராட்டினார்.

23ம் தேதி குஜராத்திலுள்ள பாட்டன்பூரா என்ற கிராமத்திலுள்ள பணித்தளத்திற்கு சென்றோம். அங்கு **சகோ. சுஜன்** தேவ செய்தியளித்தார்கள். ஜெபத்தில் பலரும் விடுவிக்கப்பட்டார்கள். மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. செல்கின்ற இடங்களிலெல்லாம் மிகுந்த ஆனந்தத்துடன் நூற்றுக்கணக்கான ஜனங்கள் கூடி வருவதையும், தேவனுடைய

வல்லமையையும், கிரியைகளையும் காண முடிந்தது. மேலும் எங்களை எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்று எங்களுக்கு மிகவும் உதவியாயிருந்த **பாஸ்டர் ஜெபராஜ், சகோ. சாமுவேல்** மற்றும் வண்டி ஓட்டுனர் அனைவரையும் பாராட்டி நன்றி கூறுகிறோம்.

பணித்தளத்தினைப் நேராகப் பார்த்துவிட்டு **சகோ. எமரால்டு** தன்னுடைய உதவியால் கட்டப்பட்ட ஆலய பிரதிஷ்டையின்போது, கூறியது : **இது முடிவல்ல ஆரம்பம், என்னால் இயன்றதை இந்த ஊழியங்களுக்காக செய்வேன்.**

நீங்களும் நேரடியாகச் சென்று பணித்தளங்களைப் பார்வையிட்டு, அங்கு நடைபெறும் ஊழியங்களைக் கண்டு ஜெபியுங்கள், உதவி செய்யுங்கள்.

# *சுதேச ஊழியர் பிரதிஷ்டை ஆராதனைகள்*


தேவனுடைய பெரிதான கிருபையினால், கடந்த **05.05.2012** சனிக்கிழமை அன்று, குலசேகரம் **பெனியல் திருமண மண்டபத்தில்** வைத்து நடைபெற்ற பிரதிஷ்டை விழாவில் நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் **சகோ. குல்லா டாமோர்** (சஜேலி, மத்தியப்பிரதேசம்) மற்றும் **சகோ. ராய்சிங் குஜார்** (ருபிகோடா, ராஜஸ்தான்) ஆகியோர் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். இந்த பிரதிஷ்டை நிகழ்ச்சியை **Bro. ஜார்ஜ்** (Jesus Delivers Ministries) அவர்கள் நடத்தினார்கள். மேலும் ஆராதனையில் தேவ செய்தியினை **சகோ. ஜெயக்குமார்** (இயேசு விடுவிக்கிறார்) அவர்கள் வழங்கினார்கள். **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் நமது ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டு, ஊழியரின் சாட்சியினை மொழியாக்கம் செய்தார்கள்.

ஆராதனையின் இறுதியில் ஊழியர் குடும்பத்திற்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. இந்த ஊழியர்களை ஜெபித்துத் தாங்கவும், பிரதிஷ்டையை நடத்தவும் ஏற்பாடு செய்த **Bro. ஜார்ஜ்** அவர்களுக்காகவும், **Jesus Delivers** ஊழியங்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். ***தேவனுக்கே மகிமை உண்டாவதாக!***

தேவனுடைய பெரிதான கிருபையினால், கடந்த **06.05.2012** ஞாயிறு அன்று, குலசேகரம் **அழகப்பபுரம்** (கன்னியாகுமரி மாவட்டம்) **ஷெக்கினா ஜெப ஐக்கியம்** ஆலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. வீர்சிங் பாபோர்** (பீம்புரா, இராஜஸ்தான்) பிரதிஷ்டை செய்யப்பட்டார். இந்த பிரதிஷ்டை நிகழ்ச்சியை சபை போதகர் **Pr.T. ராஜ கோபால்** அவர்கள் நடத்தினார்கள். தேவ செய்தியினை **சகோ. சாம் குணசீலன்** (முதல் ஆராதனையில்) அவர்களும் **சகோ. செல்வதுரை** (இரண்டாம் ஆராதனையில்) அவர்களும் வழங்கினார்கள். **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் நமது ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டு, ஊழியரின் சாட்சியினை மொழியாக்கம் செய்தார்கள்.

ஆராதனையின் இறுதியில் ஊழியர் குடும்பத்திற்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. இந்த ஊழியரைத் ஜெபித்துத் தாங்கவும், பிரதிஷ்டையை நடத்தவும் ஏற்பாடு செய்த **Pr.T. ராஜ கோபால்** அவர்களுக்காகவும் **ஷெக்கினா ஜெப ஐக்கிய சபைக்காகவும்** தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். ***தேவனுக்கே மகிமை உண்டாவதாக!***

# ¡ ± vUv CYôu v *(1766–1838)*



**கிறிஸ்மஸ் இவான்ஸ் 1766**ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் நாளன்று சாமுவேலுக்கும் ஜோன்னா இவான்ஸ்க்கும் மகனாகப் பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் வேல்ஸில் உள்ள கார்டிகன்ஷயரில் வாழ்ந்தனர். கிறிஸ்மஸ் எட்டு வயது பையனாக இருந்த போது, ஏழை செருப்பு வியாபாரியான அவருடைய தந்தை சாமுவேல் இறந்தார். பின்பு கிறிஸ்மஸ் தன்னுடைய மாமா ஜேம்ஸ் லூயிஸ் கட்டுப்பாட்டில் வளர்ந்தார். லூயிஸ் ஒரு குடிகாரனாகவும் தன்னுடைய ஒழுக்கத்தன்மை, ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து கரிசனை அற்றவராகவும் இருந்தார். இவான்ஸ் தன்னால் இயன்ற வேலையை பண்ணையில் செய்து வந்தார். அவருடைய வருவாய் அவருக்குக் கொடுக்கப்பட்ட உணவும் உடையும்தான். கிறிஸ்மஸ் மிகவும் அறியாமையில் வளர்க்கப்பட்டபடியால், 17 வயதிலும் ஒரு வார்த்தை கூட வாசிக்க முடியாதவராய் இருந்தார். அவருடைய மாமா பண்ணையில் தங்கி இருந்த நாட்களில், பலமுறை மரணத்துக்கு அருகில் சென்றார். ஆனால் அவை எல்லாவற்றிலும் தேவன் அவரைப் பாதுகாத்தார்.

குருவானவர் டேவிட் டேவிஸ் அவர்கள் ஊழியம் செய்து கொண்டிருந்த பிரஸ்பிடேரியன் சபையில் ஒரு எழுப்புதல் உண்டானது. அதில் இவான்ஸ் மற்றும் பலர் கிறிஸ்தவ விசுவாசத்துக்குள் வந்து வேதத்தை கற்கவும், வாசிக்கவும் ஆர்வம் காட்டினர். தங்களுக்கு வந்த கொஞ்ச வருமானத்தை சேமித்து வேதாகமங்களை வாங்கி தேவனுடைய வார்த்தையை தங்களுடைய சொந்த மொழியில் வாசிக்க ஆர்வம் செலுத்தினர். இவான்ஸ் ஆறு மாதம் தன்னுடைய போதகர் மூலமாக வேதாகமத்தை வாசிக்க பயிற்சி பெற்றார். அந்தப் பயிற்சியானது அவருக்கு லத்தீன் இலக்கணம் கற்க உதவி செய்தது. அறிவிலும், தேவ கிருபையிலும் வளர்ந்த இவான்ஸ் பிரசங்கம் பண்ணும் முயற்சியில் ஆர்வம் காட்டினார். இவான்சுக்கு வயது ஏறக்குறைய இருபத்து ஒன்று இருக்கும்போது, அபேர்துயரில் உள்ள பாப்திஸ்து சபையில் இணைந்தார். உறுதியான விசுவாசமும் ஆர்வமும் கொண்ட போதகர் தீமோத்தேயு தாமஸ், இவான்சுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.

தற்போது ஒரு பெரிய சோதனை இந்த ஏழை சிறுவனுக்குக் காத்திருந்தது. இவான்ஸ் மனம் மாறியபோது, அவருடன் பாவத்தில் வாழ்ந்த நண்பர்களில் ஆறுபேர் ஒரு நாள் இரவு கொடூரமாக இவான்ஸை கம்பால் தாக்கியதால் அவர் ஒரு கண் பார்வையை இழந்தார். இதனால் இவான்ஸ் **“ஒற்றைக் கண் வேல்ஸ் பாப்திஸ்து ஊழியக்காரர்”** என்று அழைக்கப்பட்டார்.

**1790**ஆம் ஆண்டு பாப்திஸ்து சங்க கூட்டத்திற்கு திரளானோர் கூடினர். அழைக்கப்பட்ட

ஊழியரை எதிர்பார்த்து இருந்தனர். ஆனால் அவர்களோ வரவில்லை. கூட்டத்தை நடத்திய ஊழியக்காரர் அங்கிருந்த வேறு ஊழியரை அணுகி பேசுமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் அந்த ஊழியக்காரரோ உயரமுள்ள, கண் குழிந்த, சாதாரண உடையணிந்திருந்த, ஒன்றைக்கண்ணை உடைய கிறிஸ்மஸ் இவான்ஸை சுட்டிக் காட்டினார். இவான்ஸூம் அழைப்பை ஏற்றுக்கொண்டு ஒப்புரவாகுதல் என்ற கருப்பொருளில் பேசினார். அவருடைய பிரசங்கத்தில் ஒருவித வல்லமை காணப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் அவருடன் இருந்தபடியால் ஜனங்கள் தேவனை ஆராதிக்கவும், துதிக்கவும் தொடங்கினர். கொஞ்சநேரத்தில் ஜனங்களின் இருதயம் உடைக்கப்பட்டு அழுகையின் சத்தமும், துதியின் சத்தமும் ஆராதனையில் காணப்பட்டது. கூட்டத்தார், யார் இவர்? எங்கிருந்து வந்திருக்கிறார்? இவரைப்பற்றி நாம் கேள்விப்படாமல் போனதென்ன? என்று கேட்கத் தொடங்கினார்கள். இந்த கூட்டத்தில் அவருடைய புகழ்ச்சி பிரபலப்படுத்தப்பட்டது.

கிறிஸ்மஸ் இவான்ஸ் தன்னுடைய ஊழியப்பாதையில் அசாதாரணமான வல்லமையையும் எழுப்புதலையும் அனுபவித்தார். தன்னுடைய கண்ணை இழந்த இராத்திரியில் நியாயத்தீர்ப்பைக் குறித்துக்கண்ட சொப்பனம், தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதின் அவசரம் குறித்த அறிவை அவருக்குள் ஏற்படுத்தியது. 1790 ஆம் ஆண்டு பாப்திஸ்து சங்கம் இவான்ஸ்ஸை லியன் பகுதியில் மிஷனெரியாக நியமித்தது. இருபத்து நான்கு வயது நிரம்பிய ஒற்றைக்கண்ணை உடைய வாலிபனின் பிரசங்கத்தை கேட்பதற்கு ஏராளமான மக்கள் சபைக்கு வந்தனர். பல நாடுகளுக்கு பிரசங்கம் பண்ணச் சென்றதாலும், ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை பிரசங்கித்ததாலும், எல்லா ஞாயிறும் மூன்று முறை பிரசங்கித்ததாலும் விரைவில் அவருடைய உடல் நலம் பாதிக்கப்பட்டது.

அதன்பின் கிறிஸ்மஸ் இவான்ஸ் பிரெக்நாக்கில் நடைபெற்ற பாப்திஸ்து சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டார். கூட்டத்தில் வடக்கு வேல்ஸ் பகுதியில் இருந்து வந்த ஊழியக்காரர்கள், வடக்கு வேல்ஸ் பகுதிக்கு ஊழியக்காரர் தேவை என்று முறையிட்டனர். அவர்கள் வடக்கு வேல்ஸில் காணப்பட்ட ஆவிக்குரிய வறட்சி, ஆதரவற்ற நிலை மற்றும் சுவிசேஷ ஊழியர்கள் இல்லாமையை விளக்கினர். இதனால் இவான்ஸ் வடக்குப் பகுதியில் உள்ள கேயர்நார்வோன்ஷயர் சென்று ஊழியம் செய்ய ஒத்துக் கொண்டார்.

மிஷனெரியாக, இவான்ஸ் வடக்கு வேல்ஸில் உள்ள லென் என்ற கிராமப்பகுதியில் ஊழியஞ் செய்வதற்காக நியமிக்கப்பட்டார். அந்தப் பகுதியில் ஊழியம் செய்வது ஒரு அற்புதமான மாற்றத்தை தன்னுடைய ஊழியத்தில் கொண்டுவரும் என்று அவருக்கு தோன்றியது. அவர் சந்தோஷத்துடனும், ஜெபத்தில் நம்பிக்கையுடனும் பிரசங்கித்துக்கொண்டு இருந்தார். அவர் சொல்லுகிறார் : **"நான் பரலோக ராஜ்யத்தில் மூன்று உயர்ந்த காரியங்களைக் காண்கிறேன்" அவை நீதி, சமாதானம் மற்றும் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷம்"** சில ஓய்வு நாட்களில் 20 மைல்கள் நடந்து ஐந்து முறை இவான்ஸ் பிரசங்கம் செய்தார். கிறிஸ்மஸ் இவான்ஸின் ஊழிய வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணம் ஜெபத்தில் அதிக நேரம் செலவழித்ததாகும்.

இவான்ஸ் ஆங்கில்சேயில் இருந்து வந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு வருடத்திற்கு 17 பவுண்டுகள் மட்டுமே சம்பளமாகப் பெற்றுக் கொண்டு ஊழியம் செய்தார். இவான்ஸ், 1792ஆம் ஆண்டு அவருடைய பிறந்த நாளான கிறிஸ்மஸ் நாளன்று அவருடைய சபை உறுப்பினராக இருந்த கேத்தரின் ஜோன்ஸ் என்பவரை தனது 26ஆம் வயதில் மணந்தார். அவர் தனது வீட்டை தீவின் ஒரு முனையில் கட்டி அதில் எளிய வாழ்க்கை வாழ்ந்தார். ஒரே ஒரு அறை மட்டும் கொண்ட அந்த வீட்டில் இருவரும் சுமார் இருபது வருடம் மகிழ்ச்சியாகவும், எந்த வித முறுமுறுப்பும் இன்றி வாழ்ந்தனர். பதினேழு வயது வரை வாசிக்க அறியாத இவான்ஸ் எபிரெயு மற்றும் கிரேக்க மொழிகளில் புலமை பெற்றார். இவான்ஸின் பிரசங்கம் ஆயிரக்கணக்கான உள்ளங்களை அசையச் செய்தது மட்டுமின்றி தேசம் அவரைக் கண்டு கொண்டது.

கிறிஸ்மஸ் இவான்ஸ் முப்பத்து நான்கு வருடங்களாக ஆங்கிள்சேயில் பாப்திஸ்து ஊழியக்காரராக இருந்தார். 1823ஆம் ஆண்டு அவருடைய மனைவி கேத்தரின் மரித்தார். இது அவருக்கு பெருத்த துயரத்தைக் கொடுத்தது. கேத்தரின் உண்மையுள்ள, ஆவிக்குரிய மனைவியாக இருந்தது மட்டுமின்றி காற்று, மழை, பனியிலும் இவான்ஸுடன் கூட நடந்தார். சிந்தனை நிறைந்த, ஜெபிக்கக்கூடிய, நம்பிக்கை உள்ள கேத்தரின் எப்பொழுதும் மகிழ்ச்சியாகக் காணப்படுவார். அதே வருஷத்தில் கண்ணில் ஏற்பட்ட பிரச்சினை நிமித்தமாக இவான்ஸ் சில மாதங்கள் அபெரிஸ்ட்வித்தில் தங்கி சிகிச்சை பெற்றார். தனது நெருங்கிய நண்பனின் அறிவுரைப்படி, இவான்ஸ் ஒரு பெண்ணை மணந்தார். அவர் இவான்சுக்கு நல்ல மனைவியாகவே இருந்தார்.

இவான்ஸ் தனது இறுதி நாட்களில் ஏறக்குறைய இருநூறு பிரசங்கங்களைத் தயாரித்து வெளியிட்டார். 1838 ஆம் ஆண்டு இவான்ஸ் வேல்ஸின் பல பகுதிகளுக்குச் சென்று பிரசங்கித்தார். அதன் மூலம் கிடைத்த பணத்தை ஆலய வளர்ச்சிக்கு கொடுத்து உதவினார். இவான்ஸ் நாற்பது முறை மழையிலும் பனியிலும் பயணமாக தெற்கு வேல்ஸ்க்குச் சென்று தன்னுடைய சபையின் பணத் தேவையைச் சந்தித்தார். ஒரு திங்களன்று மவுண்ட் பிளஸ்சண்ட் சபையில் பிரசங்கித்துக் கொண்டிருந்த அவர் தனது உடல் பெலவீனத்தின் நிமித்தம் **“இதுதான் என்னுடைய கடைசி பிரசங்கம்”** என்று கூறினார். அவர் ஜுலை 20ம் தேதி இவான்ஸ் மரித்தார். ஸ்வான்ஸியில் உள்ள பாப்திஸ்து சபை அருகில் உள்ள கல்லறைத் தோட்டத்தில் அவருடைய உடல் அடக்கம் செய்யப்பட்டது. அவருடைய ஊழியத்தில் ஏராளமான ஜனங்கள் மனமாற்றத்துக்குள்ளாயினர். பழைய சபைகள் உயிர்ப்பிக்கப்பட்டு, புதிய சபைகளாக முளைத்தெழுந்தன.

கிறிஸ்துவினிமித்தம் வறுமையும், உபத்திரவங்களையும் சகிக்கும்படி இவான்ஸ் அழைக்கப்பட்டார். இவான்ஸ் இளைய ஊழியர்களுக்கு எழுதும்போது **“தேவனுடைய கிருபையை, அறிவுக்கூர்மையாகவும், அன்பாகவும் எந்தவித வெட்கமும் இன்றி பிரசங்கிக்க வேண்டும்”** என்றும், **“வேதாகமத்தின் கருப்பொருள் முன் குறித்தலில் இருந்து, மகிமைப்படுத்துதல் வரைக்கும் உள்ளது”** என்றும் எழுதினார்.


## *குஜராத் பணித்தள அலுவலகத்திற்கு...* ஊழியர்கள் தேவை...

**“அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்.” மத்தேயு 9:37**

பீல் மக்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டும் பணியில், எங்களுடன் இணைந்து ஊழியங்களை நிறைவேற்ற குஜராத், தாகோத்திலுள்ள ஷாலோம் பணித்தள அலுவலகத்தில் **நிதித் துறையை நிர்வகிக்க... B.com., மற்றும் Tally படித்து முடித்து அனுபவமுள்ளோர்** (Accounts Department –க்கு) தேவ பிள்ளைகள் மிகவும் அவசரமாகத் தேவைப்படுகிறார்கள்.

ஊழியத்திற்கென்று அர்ப்பணித்த, தேவனால் அழைக்கப்பட்ட, ஊழிய வாஞ்சை உள்ளவர்கள் இதை ஒரு தேவனுடைய அழைப்பாகவும், அரிய வாய்ப்பாகவும் கருதி எங்களோடு தொடர்பு கொள்ள அன்பாய் கேட்கிறோம். மேலும் ஜெபித்து உங்களுக்கு தெரிந்தவர்கள் இருந்தால் அறிமுகப்படுத்தி ஊழியத்திற்கு அனுப்பும்படி அன்புடன் கேட்கிறோம்.

## GÝkÕ LhÓúYôm YôÚeLs...



வளர்ந்து வரும் நம் ஷாலோம் மிஷனெரி பணித்தளங்களில் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் கூட்டங்கள், பயிற்சிகள் மற்றும் அனைத்து திட்டங்களையும் நிறைவேற்ற மாதந்தோறும் ரூ. 5 இலட்சங்களுக்கு அதிகமாக தேவைப்படுகிறது. அதை சந்திப்பதற்காக ஜெபத்துடன் மாதந்தோறும் ரூ. 500 கொடுக்கக் கூடிய ஷாலோம் ஊழிய பங்காளர்கள் 1000 பேர்கள் மிக அவசரமாக தேவை. இதுவரை 140 பேர் இணைத்துள்ளார்கள்.

இந்த இதழை வாசிக்கும் அன்பானவர்களே, இதுவரை நீங்கள் ஷாலோம் ஊழியத்திற்கு உதவி செய்யவில்லையெனில், உடனடியாக ரூ.500 மாதம் அனுப்பி ஜெபித்து ஷாலோம் ஊழிய பங்காளராக இணையுங்கள். மேலும் இந்த ஷாலோம் ஊழியங்களை ஏதாவது 2 பேருக்கு அறிமுகம் செய்து, ஊழிய பங்காளராக இணைத்து வைக்க அன்புடன் கேட்கிறேன். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஜெபியுங்கள்! ETYôN ù_Tm & பங்கு பெறுங்கள்!!

Yôd Ï jRjR BºoYôRd áÓûL

| | |
|---|---|
| நாள் : **02.06.2012 (சனிக்கிழமை)** | நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை** |

இடம் : **தலைமை அலுவலகம் அன்பு பகிர்வு இயக்கம்,**

5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,**

பாளையங்கோட்டை

# ஜெபிக்க வேண்டுகிறோம்...



**பீல் மக்கள் இரட்சிப்பிற்காக**

✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**2015–க்கான தரிசன திட்டங்கள் நிறைவேற்றப்பட**

✞ தேவனுக்கு சித்தமானால், 2015க்குள், 1000 திருச்சபைகள் மற்றும் 1000 சுதேச ஊழியர்கள் எழுப்பப்படவும், 10 இலட்ச ஆத்துமாக்கள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் திருமண்டலப் பணிகள்**

✞ குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் தேவன் எழுப்பி தந்த சுமார் 600க்கும் அதிகமான ஷாலோம் திருச்சபைகள் ஜெபிக்கும் திருச்சபைகளாக, ஆத்தும ஆதாயம் செய்யும் திருச்சபைகளாக, தேவனுக்காக கொடுக்கும் திருச்சபைகளாக விளங்க ஜெபியுங்கள். அவை பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினாலும் வல்லமையாலும் நிரப்பப்பட்டு, பாரத தேசத்தில் சாட்சியுள்ள சபைகளாக, திருமண்டலமாக விளங்க ஜெபியுங்கள்.

**பணித்தள அலுவலக மற்றும் திட்ட செயல்பாடுகள்**

✞ நம்முடைய தாகோத் பணித்தள அலுவலகம்; Compassion project, School, Hostel, Training Unit, Accounts Department மற்றும் Ṣhalom Charity Mission மூலமாக நடைபெறும் திட்டங்களை தேவன் ஆசீர்வதிக்கவும், பணிபுரியும் தேவ பிள்ளைகள் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சுதேச ஊழியர்கள்**

✞ தேவன் தந்த 500க்கும் அதிகமான சுதேச ஊழியர்களுக்காக தேவனைத் துதிப்போம். சுதேச ஊழியர்களின் பரிசுத்தமான வாழ்வு, ஜெப வாழ்வு, மற்றும் வேதத்தை நன்கு தியானித்து சபையில் ஆத்துமாக்களை சரியாக வழி நடத்த ஜெபியுங்கள். ஊழியத்தின் தேவைகளான சபைக் கட்டிடம், ஒலி பெருக்கி சாதனம், மோட்டார் சைக்கிள் போன்றவை கிடைக்கப் பெற ஜெபியுங்கள்.

✞ சுதேச ஊழியர்கள் குடும்பம், பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்படவும், பிள்ளைகளின் படிப்பு, எதிர்காலத்திற்காகவும், பணத் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள். வீடுகள் இல்லாத ஊழியர்களுக்கு தேவன் வீடுகளை கட்டித்தர ஜெபியுங்கள். ஊழியர்களின் பிரயாணப் பாதுகாப்பு; நல்ல சுகம் மற்றும் பிசாசின் கண்ணிகளுக்கு தேவன் அவர்களை விலக்கி காத்துக் கொள்ள ஜெபியுங்கள்.

**ஷாலோம் கிராம ஆலயங்கள்**

✞ கர்த்தருக்கு சித்தமானால், இவ்வருட இறுதிக்குள், 100 ஆலயங்கள் கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள். கிராம சபைகள் கட்ட அனுமதிகள் சரியாக கிடைக்கவும், கட்டுமான வேளையில் எதிர்ப்புகள் நீங்கவும், தேவையான நிதிஉதவி கிடைக்கப் பெறவும், ஸ்தலசபைகள் உற்சாகமான காணிக்கை தந்து உதவிபுரியவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷன்**

✞ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் பீல் ஆதிவாசி ஜனங்களின் கல்வி, மருத்துவம், குடிநீர்வசதிகளுக்காவும், பொருளாதார முன்னேற்றப் பணிகளுக்காகவும், நம் ஊழியத்தை செய்கிற தேவ பிள்ளைகளின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

✞ இந்த வருடம் ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் தேவையான அளவுக்கு மழை பெய்யவும், நம் பீல் மக்கள் விவசாயத்தின் மூலமாக ஆசீர்வதிக்கப்படவும், அவர்களை தேவன் பொருளாதாரத்தில் உயர்த்தவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஆதிவாசி மாணவர்களுக்கான கல்வி உதவி 2012–2013**

✞ வருகிற 2012–2013 கல்வியாண்டில் நம் மாணவர்களுக்கு நல்ல பள்ளிகளில் இடம் கிடைக்கவும், தேவன் நல்ல ஞானத்தை கட்டளையிடவும், மாணவர்கள் யாவரும் கருத்துடன் படிக்கவும் ஜெபியுங்கள். மட்டுமல்லாமல் அவர்களுக்கு உதவும்படியாக தேவையான நிதிஉதவி குறைந்தது ரூ. 5 இலட்சங்கள் கிடைக்கப் பெற ஜெபியுங்கள்.

**வீடியோ ஆடியோ நிலையங்கள் உருவாக்கப்பட**

✞ தேவனுக்குச் சித்தமானால், ஜுன் மாதத்தில் ஆடியோ, வீடியோ படப்பிடிப்பு மற்றும் எடிட்டிங் பண்ணக்கூடிய அளவிற்காக சாதனங்கள் வாங்கப்பட நிதி உதவி மற்றும் அதற்கேற்ற ஊழியர்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஆதரவாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்காக....**

✞ நம் ஷாலோம் ஊழியங்களை ஜெபத்தினாலும் பொருளுதவியினாலும் தாங்கி வருகிற நமது ஆதரவாளர்கள் குடும்பங்களுக்காகவும் சபைகளுக்காகவும் ஊழியங்களுக்காகவும், இதர ஊழிய ஸ்தாபனங்களுக்காகவும், ஸ்தாபன தலைவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

✞ வளர்ந்து வரும் நம் ஷாலோம் ஊழியத்தின் திரளான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

✞ நம் ஷாலோம் ஊழியத்தின் Board Members மற்றும் தன்னார்வத் தொண்டர்கள், பிரதிநிதிகளுக்காக ஜெபியுங்கள்.

✞ தூத்துக்குடி தலைமை அலுவலக பணியாளர்கள் மற்றும் முன்னேற்றப் பணியார்கள் குடும்பங்களுக்காக ஜெபியுங்கள்.

**பேராயர் தேவதாஸ் குடும்பத்திற்காக**

✞ பேராயர் தேவதாஸ் மற்றும் அவர்கள் மனைவி வஹிதா தேவதாஸ் அவர்களுக்கும், டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா பிள்ளைகளுக்கும், தேவ ஞானம், விசேஷசித்த அபிஷேகம், தேவ பாதுகாவல் மற்றும் நல்ல சுகத்தையும் தேவன் தந்து, அவர் தந்த பரம தரிசனப் பணியை நிறைவேற்ற ஜெபியுங்கள்.



# தலைமுறைகள் இயேசுவைக் காணட்டும்

சகோ. J. *அற்புதராஜ் மர்காஷிஸ்*

இந்தியாவிற்கு தமது அப்போஸ்தலனாகிய தோமாவை அனுப்பிவைத்த ஆண்டவர், தொடர்ந்து அநேக தேவ மனிதர்களை பல நூற்றாண்டுகளாக அனுப்பி இந்தியாவைச் சந்தித்தார். இதில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் தென் தமிழகத்திற்கு தேவன் அனுப்பிய அருட்தொண்டர்கள் படையெடுத்து வந்தனர். அவர்களில் சிறப்பாக இடையன்குடி, தூத்துக்குடி பகுதியில் **ராபர்ட் கால்டுவெல்**, நாசரேத் வட்டாரத்தில் **கனம் மர்காஷியஸ் ஐயர்,** மெஞ்ஞானபுரம் பகுதியில் **கனம் ஜான்தாமஸ்,** சாயர்புரம் வட்டாரத்தில் **G.U. போப்,** பண்ணைவிளை & டோனாவூர் பகுதியில் **தாமஸ் உவாக்கர், எமிகார்மைக்கேல் அம்மையார்,** திருநெல்வேலியில் பேராயர் **ஸ்டீபன் நீல்** போன்றவர்கள் வியக்கத்தகுந்த தொண்டாற்றினார்கள்.

இவர்கள் எல்லாம் மேலை நாட்டிலிருந்து தங்கள் வாழ்வை இயேசுவுக்காக கொடுத்தனர். ஒவ்வொருவம் இறைவன் தங்களை பயன்படுத்திய பகுதியில் முழு ஈடுபாட்டுடன் அந்தந்த பகுதியின் வளர்ச்சிக்காகவும், சுவிசேஷத்தை அறிவிக்கவும் அரும்பாடுபட்டு தங்கள் இன்னுயிரை இந்திய மண்ணிற்கு ஈந்தனர். அவர்கள் எவரேனும் ஒருவர் இறை பணி மட்டுமே முக்கியம் என்று அதை மட்டும் செய்யவில்லை. இறை வார்த்தையை தலை முறை தலைமுறையாக நிலை நிற்கச் செய்தனர். தங்கள் பகுதியல் மக்களின் அனைத்து தேவையையும் சந்தித்தனர். முதலாவது கல்வியறிவு, அதைத் தொடர்ந்து சமுதாய சீர் திருத்தம், மேலும் பொருளாதா முன்னேற்றம், மூட நம்பிக்கை, மூடப்பழக்க வழங்கங்களில் மாற்றம் என்று வாழ்வின் எல்லா பகுதியையும் மறுரூபமாக்கப் பாடுபட்டனர்.

திருத்தொண்டர்கள் தங்கள் பணித்தளத்தையும், மக்கள் சமுதாயத்தையும் தேவனுடைய ஆவியால் கண்டறிந்தவுடன் அவர்கள் செய்தது அருட்பணி மட்டுமே அல்ல. அவர்கள் நிரந்தரமாக வசிப்பதற்கு வாசஸ்தலம், பெரும்பாலும் அருட்தொண்டர்களே விலை கொடுத்து வசிக்கும் பூமியை வாங்கித் தந்துள்ளனர். அதில் தங்கித் தாபரிக்க சிறு குடிசைகள் அமைத்து தந்தனர். அரை நிர்வாணியாயிருந்த அவர்களை உடுத்துவித்தார்கள். நோயற்ற வாழ்வு வாழ எல்லா சுகாதார மேம்பாடும் செய்து தந்தனர். பின்பு கல்வி கற்றுத் தந்தனர், தொழில் கற்றுத் தந்தனர், இதற்கு பள்ளிக்கூடங்கள் பல உருவாக்கி, மருத்துவமனைகள் கட்டித்தந்து, காலரா போன்ற கொடிய பரவும் நோய்களுக்கு எதிர்த்து நின்று மக்களைக் காப்பாற்றினர். நாசரேத் பகுதியில் காலரா நோய் பரவியதால் **மர்காஷிஸ் ஐயரவர்கள்** ஆலயத்தில் பல மணி நேரம் கண்ணீரோடு ஜெபித்து நோயை விரட்டினார். தினமும் காலையில் திருவிருந்து ஆராதனை நடத்தினார்கள். அந்த ஒழுங்கு இன்றும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

கல்வி கற்க ஆரம்பித்த விசுவாசிகள் தங்கள் மூடப்பழக்கங்களிலிருந்து விடுபட்டனர். ஒவ்வொரு மிஷனெரியும் தன் ஊழியஸ்தலத்திற்குச் என்று நிலத்தை வாங்கி ஒரே வளாகத்தில் ஆலயம், பள்ளிக்கூடம், மருத்துவமனை, தொழில் கற்கும் இடம் அனைத்தையும் ஏற்படுத்தினார்கள். ஆகையால்தான் தலைமுறை தலைமுறையாக கிறிஸ்தவம் அப்பகுதிகளில் நிலை நிற்கிறது. ஆலயம், பள்ளிக்கூடம் கட்டுவதற்கு தங்கள் சொந்த மண்ணில் நண்பர்களையும் உறவினர்களையும் சந்தித்து நன் கொடை பெற்றார்கள். செல்வந்தராய் இருந்தவர்கள் தங்கள் செல்வத்தையெல்லாம் இந்திய மண்ணின் ஊழியத்திற்கென்று தாராளமாய் கொடுத்துதவினர்.

இவவாறு நம் பகுதியில் நாம் எல்லாரும் கல்வியிலும் நாகரீகத்திலும், சுகாதாரத்திலும், பழக்க வழக்கங்களிலும் முன்னேறுவதற்கு பல நூறு ஆண்டுகள் சென்றது. ஆனால் நாம் இன்று பீல் இன மக்கள் மத்தியில் செய்து வரும் ஊழியம் முற்றிலும் மாறுபட்டது. தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையான, பொல்லாத ஆவியை வணங்கிய, மந்திரவாதிகள் மற்றும் பூஜாரிகளையே நம்பியிருந்த மக்களை கிறிஸ்துவிடம் வழி நடத்துவது நமது முதல் கடமையாகும். பீல் இன மக்களைக் கொண்டு, பீல் இன மக்களைக சந்திக்க நாம் மேற் கொள்ளும் திட்டம் கர்த்தரே நமக்குத் தந்த உயரிய தரிசனத் திட்டமாகும். தீராத நோயால் தாக்கப்பட்ட ஒரு பீல் இனத்தைச் சார்ந்தவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தை ஏற்றுக் கொண்டு தன்னிலே அற்புத நிகழ்ச்சி நடந்தவுடன் விசுவாசத்தில் ஸ்திரமாய் சாட்சி பகர்கிறான். தனக்குக் கர்த்தர் செய்த அற்புதத்தை தன் இனத்தாருக்குச் சொல்லுகிறான். இவ்வாறு ஒரு கூட்டம் மக்கள் இயேசுவை ஆராதிக்க முன் வந்துள்ளனர். இந்தக் கூட்டத்தில் கர்த்தரால் அழைக்கப்பட்டவன் தனது சொந்த இடத்திலேயே ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கு அனுமதித்ததுக் கூட்டமாக ஆண்டவரை ஆராதிக்க முன் வருகின்றனர். இவ்வாறு ஷாலோம் ஊழியத்தில் 20 ஆண்டுக்குள் 1.5 லட்சம் ஆத்துமாக்கள், 600 ஆராதனைக் குழுக்கள், 500க்கும் அதிகமான சுதேச ஊழியர்கள், ஒரு திருமண்டலம், பேராயர், அநேக போதகர்கள் என வேகமாக வளர்ந்து பெருகியுள்ளது.

பீல் இன மக்களுக்கு கல்வி கொடுக்க வேண்டும், அவர்களின் அவசியத் தேவைகள் சந்திக்கப்பட வேண்டும், இதற்காக சுமார் 1000 பீல் இன சிறுவர்கள் படித்து முன்னேறும்படியாக பள்ளிகள் மற்றும் விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எண்ணிக்கை சிறயதாக இருந்தபொழுது தேவைகளும் சிறியதாகவே இருந்தன. ஆனால் வளர்ந்து பெருகிவரும் சூழ்நிலையில் பள்ளிகள், விடுதிகள் பெரியளவில் திட்டமிட்டுக் கட்டப்பட வேண்டும். அதின் தேவையை நாம் சந்திக்க வேண்டும். இப்பொழுது ஒரு சில பீல் இன சிறுவர்கள் படித்து முன்னேறியுள்ளார்கள். அவர்கள் மாநிலத்தில் அரசு சலுகைகள் நிரம்பப் பெற்று உயர்ந்த நிலைக்கு சீக்கிரம் வந்துவிடுவார்கள். இன்னும் 10 ஆண்டுக்குள் பீல் இன மக்கள் கல்வி அறிவு படைத்தவர்களாய், சமுதாய சீர் திருத்தம் பெற்றவர்களாய், இந்தியாவிலேயே முன்னோடியான மக்கள் கூட்டமாய் எழும்பும். இதில் சந்தேகமில்லை. 10 ஆண்டுக்குள் தன்னிறைவு பெற்ற மக்கள் கூட்டமாக மாறிவிடும். அதுவரைக்கும் நமக்கு உதவிய மேலை நாட்டு மிஷனெரிகள் போல், நாமும் நமக்கு இறைவன் தந்துள்ள வசதிக்கேற்ப உதவிக்கரம் நீட்டுதல் வேண்டும். ஒரு ஜாதி மக்களை மீட்கும் பணியிலே தீவிரம் காட்ட வேண்டும். 10 ஆண்டுக்குள் மூன்று மாநிலத்திலும் 3 திருமண்டலங்கள், பல பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், தொழிற்கல்வி நிலையங்கள் என எல்லாவகையிலும் வளர்ந்து பெருக நாம் உதவிட வேண்டும்.

நமது தேவைக்குப் போக எஞ்சியதை இந்த பீல் இன மக்களின் இன்றைய தேவையை சந்திக்கக் கொடுத்து, ஒரு தலைமுறையை ஆதாயம் செய்து பரலோகத்தில் பொக்கிஷங்களை முதலீடு செய்திட தைரியமாக அர்ப்பணிப்போம். நம்மையும் நமக்குள்ளவற்றில் சிறப்பான பகுதியைக் கொடுத்து கர்த்தருக்குள் மகிழ்ச்சியடைவோம். கர்த்தருக்காகக் கொடுத்தவர்கள் ஒருநாளும் நஷ்டப்பட்டு போனதில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயம் இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

பீல் இன மக்களின் ஆவிக்குரிய தேவைகளை சந்திக்க முன் வந்துள்ள நாம், அவர்கள்

முன்னேற்றத்துக்கு வித்திட்டு, ஆதிவாசிகள் என்ற சலுகைகளை முழுமையாக அவரவர் மாநில அரசுகள், மத்திய அரசு மூலமாகப் பெற்று நல்ல நிலைக்க அவரக்ள் வளர வழி செய்திட வேண்டும். சில ஆண்டுகளில் அவர்கள் நல்ல அரசு அதிகாரிகளாய், பொறியியல் வல்லுநர்களாய், மருத்துவர்களாய், செவிலியர்களாய், ஆசிரியர்களாய், ஆட்சியாளர்களாய் உயர்ந்து தங்கள் இன மக்களுக்கு எல்லாவிதத்திலும் உதவி செய்ய முன் வருவார்கள். அப்பொழுது அவர்களே தங்கள் தேவைகளை சந்திக்க உதவிடும் காலம் விரைவில் வரும். அது வரை இந்த ஊழியத்தின் மகிமையைக் கண்ட நாம் நம்மால் இயன்ற உதவிகள் செய்திட முன் வருவோம். நம்முடைய தியாகத்தால், ஜெபத்தால், ஈகையால் ஒரு சமுதாயம் தழைக்க உதவிடுவோம் இயேசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்.

## SHALOM CHARITY MISSION
## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **“கல்வி அறிவு வளர்ச்சி”** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **Shalom Charity Mission** – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission** – மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாகத் திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும். Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission** – என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

***மேலும் குழந்தை ஆதரவுத் தொகை*** அனுப்புவோர் **Shalom Charity Mission** – என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

# காணிக்கை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் Bank Of Baroda வங்கி மூலம் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்பலாம். FCRA A/c. No.07080100002672 - Sharing Love Mission. IFS Code : BARB0TUTICO

---

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : MBL0000106)**

---

**AXIS BANK (U.T.I)**

**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

**ICICI Bank**

**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

BRWYô[oLs GeL[Õ Ye¡d LQd¡p Lô¦dûL ùNÛjÕm úTôÕ, EeL[Õ ùTVûW Li¥lTôL LmëhP¬p T§U ùNnÙmT¥ JqùYôÚ Øû\Ùm Ye¡ AÛYXL¬Pm á± AÛR Eß§ ùNnÕ ùLôs[Üm, CpûXùV²p ¿eLs ùNÛjÕm Lô¦dûL Vôo ùNÛj§VÕ Gu\ ®TWm GeLÞdÏm ùR¬VôUp úTôL Yônl×s[Õ.

பாராளுமன்றத்தின் 60—வது ஆண்டு தினவிழா 13.05.2012 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் ஜனாதிபதி பிரதீபா பட்டில் உரையாற்றினார்கள். முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். மேலும் 5 ரூபாய் 10 ரூபாய் சிறப்பு நாணயங்கள் வெளியிடப்பட்டன.

---

நேபாளத்தில் விமானம் மலையில் மோதி விபத்துக்குள்ளானதில் 2 தமிழர்கள் உட்பட 13 இந்தியர்கள் பலியானார்கள். விபத்துக்குள்ளான இந்த விமானம் அக்னி ஏர் என்ற தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான குட்டி விமானம் ஆகும். மலைப் பகுதியில் அமைந்துள்ள ஜோம்சோம் விமான நிலையத்தில் தரையிறங்க முயன்ற போது விமானம் மலையில் மோதி விபத்துக்குள்ளானது. தொழில் நுட்ப கோளாறு காரணமாக இந்த விபத்து நடத்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

---

ரத்ததானம், உடல் உறுப்பு தானம் பலருடைய உயிரைக் காப்பாற்றுகிறது. இத்தகைய தானம் வழங்கும் மனப்போக்கு தற்போது பிரபலமாகி வருகிறது. இதில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 83 வயது முதியவர் நிக்கோலஸ் கிரேஸ், 57 முறை இரத்ததானம் வழங்கி சாதனை புரிந்துள்ளார். மேலும் தற்போது சிறு நீரகத்தை தானம் கொடுக்க முன் வந்துள்ளார்.

---

இஸ்ரேல் நாட்டையொட்டியுள்ள மத்திய தரைக்கடல் பகுதியில் திடீர் நிலநடுக்கம் மே 12ம் தேதி ஏற்பட்டது. இது 5.5 ரிக்டர் அளவில் பதிவானது. இதன் காரணமாக இஸ்ரேல் முழுவதும் நில அதிர்வு ஏற்பட்டது. இதனால் அதிர்ச்சியடைந்த மக்கள் வீடுகளை விட்டு அலறியடித்துக் கொண்டு வெளியேறினர். இதேபோல பாலஸ்தீனத்தில் உள்ள மேற்கு கரை மற்றும் காசா பகுதியிலும் நிலநடுக்கம் உணரப்பட்டதாக இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நன்றி : www.dailythanthi.com

**எங்களுடன் தொடர்பு கொள்ள**

<u>தலைமை அலுவலகம்</u>

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

கிராம ஆலயம்

# அந்தேஸ்வர்

## இராஜஸ்தான்



இராஜஸ்தானிலுள்ள பான்ஸ்வாடா மாவட்டத்தில், நகரத்தில் இருந்து மிகவும் உள்ளடங்கிய கிராமம்தான் அந்தேஸ்வர் கிராமமாகும். இந்த கிராமத்தில் ஒரு பெரிய புற மத ஆலயம் உண்டு.

இங்கு வாழும் மக்கள் வருடத்திற்கு இரண்டு முறை விழா நடத்தி, குடித்து வெறித்து, களித்திருப்பார்கள். மேலும் திருடுவது இவர்களுக்கு கை வந்த கலையாகும். இந்த சூழ்நிலையில் பிறந்த வளர்ந்தவர்தான் சகோ. ரமேஷ் சந்திர D. கட்டாரா. இவரது ஐந்து வயது மகன் பாதாமிலால், வயிறு வீங்கி, மரணத் தருவாயில் இருந்தான். இந்த மகனை அநேக கோவில்களுக்கு கொண்டு சென்று மந்திரம் செய்தார்கள், பல மருத்துவமனைக்குக் கொண்டு சென்று மருத்துவம் பார்த்தார்கள்.ஆனாலும் சற்றும் நோய் குணமாகவில்லை.

இந்தச் சூழ்நிலையில் மிகவும் கலக்கமடைந்த நிலையில் இயேசு கிறிஸ்துவை குறித்து கேள்விப்பட்டு, மகர்தா கிராம ஆலயத்தில் நடைபெறும் ஆலய ஆராதனைக்கு தன் மகனை அழைத்துச் சென்றார் சகோ. ரமேஷ் சந்திர கட்டாரா. அங்கு ஊழியரும் இவரது மகனுக்கு எண்ணெய்ப் பூசி பாரத்துடன் ஜெபித்தபோது, தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார்.

தனது மகனுக்கு கிடைத்த பரிபூரண சுகத்தைக் கண்டு சகோ. ரமேஷ் சந்திர D. கட்டாரா முழுக் குடும்பமாக இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். மேலும் அவர் தொடர்ந்து ஆலய ஆராதனையில் பங்கு பெற்றார். தேவன் அவரை பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்து, தன்னுடைய ஊழியத்தினைச் செய்யுமாறு அழைத்தார். தேவனுடைய அழைப்பினை ஏற்று 2001ம் ஆண்டு I.T. மிஷன் என்ற ஸ்தாபனத்தின் மூலம் வேதாகம பயிற்சி பெற்று தனது கிராமத்தில் சுயமாக ஊழியம் செய்து வந்தார்.

2006ம் ஆண்டு முதல் ஷாலோம் ஊழியத்துன் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். தற்போது 28க்கும் அதிகமான குடும்பத்தார் இரட்சிக்கப்பட்டு தேவனண்டை வந்துள்ளனர். தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியம் என உணர்ந்த அவர் தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாக தந்தார். அந்த நிலத்தில் தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாக இந்த அந்தேஸ்வர் கிராம ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

***Sponsor's Name :*** ***Mr. Aaron Jeyasingh,*** Tirunelveli.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2012ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



மாணவியின் பெயர் : நிஷாந்த் M. கட்டாரா

தந்தையின் பெயர் : மினேஷ் கட்டாரா

தாயார் பெயர் : ஜம்னா கட்டாரா

பிறந்த நாள் : 25.04.2003

படிக்கும் வகுப்பு : 3rd Std.,

சொந்த ஊர் : மல்வாசி

மாவட்டம் : தாகோத்

மாநிலம் : குஜராத்

## மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–

இவனுடைய தந்தை சகோ. மினேஷ் கட்டாரா இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தை சேர்ந்தவர். இவர் இவருடைய தங்கையின் மூலம் இயேசு தான் உண்மையான தெய்வம் என அறிந்து, இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து வேதம் வாசித்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தார். தேவன் இவரை தமது ஆவியினால் அபிஷேகித்து வழிநடத்தி வருகிறார்.

மேலும் தேவனுக்காக வாழ வேண்டும் என்ற வாஞ்சையை தேவன் இவருக்குத் தந்ததினால், சபையில் மூப்பராக இருந்து ஊழியங்களில் உதவி செய்து வருகிறார். தேவனுக்கே மகிமை!

**மாணவனைக் குறித்து :–** நிஷாந்த் சுமாராக படிப்பான். ஒழுங்காக ஆலயத்திற்கு செல்பவன்

**ஜெபியுங்கள்:–** இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற வேலைகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**மாணவரைத் தாங்குபவர் :–** ***Mr. Alden Zach - Chennai.***

நீங்களும் மாதம் ரூ. 500/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம்.
இன்னும் 330 குழந்தைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.